
# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

செப்ரெம்பர்.04 - செப்ரெம்பர்.10, 2013 பக்கம் - 24 30/-



## எங்கே... எங்கே... உறவுகள் எங்கே..

## மும்பையில் குதறப்பட்ட பெண் ஊடகவியலாளர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுடைய அமைதியான வாழ்வுக்கும் பெறப்பட்ட நிம்மதியை மீண்டும் புலிகள் குழப்பாமல் இருக்கவும் புலிகளிடமிருந்து மக்களைப் பாதுகாக்கவுமே 1995ஆம் ஆண்டின் பின்னர் நாம் பல நூற்றுக்கணக்கான வீடுகளையும் இடங்களையும் பிடித்து வைத்திருந்தோம். இதனால் மக்கள் பட்ட துன்ப துயரங்களை நான் நன்கு உணர்ந்துள்ளேன். வீடுகள் காணிகள் இன்று மீள கையளிக்கப்படும் நிலையில் அவர்களுடைய மகிழ்ச்சியையும் புரிந்து கொண்டுள்ளேன்.

**யாழ்.மாவட்டப் படைகளின் கட்டளைத்தளபதி**
**மேஜர் ஜெனரல்**
**மஹிந்த ஹத்துருசிங்க ஓதிய வேதம் இது.**

தென்னிலங்கை போன்று வடபகுதியிலும் உயர்பாதுகாப்பு வலயங்கள் இருக்க முடி யாது. ஆனால் பாதுகாப்பு காரணங்களுக்காக தென்னிலங்கையில் பாதுகாப்பு வலயங்கள் இருப்பதைப்போன்று வடக்கிலும் பாதுகாப்பு வலயங்கள் இருப்பதை தவிர்க்கமுடியாது.

**இது அமைச்சரும் ஈ.பி.டி.பி. செயலாளர்**
**நாயகமுமாகிய**
**டக்ளஸ் கண்டுபிடித்த தத்துவம்.**

# ஓதுவார் ஓதல்

**1990** களுக்கு முன்னர் முஸலி பிரதேச செயலர் பிரிவில் 500 வரையான முஸ்லிம் குடும்பங்கள் இருந்தன. அவை இடம் பெயர்ந்து சென்ற நிலையில் இப்போது அவை ஆறுமடங்காக அதிகரித்து மூவா யிரத்தை எட்டியுள்ளன. இந்த குடும் பங்களுக்கு முஸலி யிலேயேதான் காணி வழங்கப்படவேண்டும். இல்லாது விட் டால் அவர்கள் எங்குபோவது?

**இது முஸலிப்பிரதேச செயலரின் நியாயதர்க்கம்.**



## ஒரு பேச்சுக்கு இவர்கள் சொல்வது சரி என்று எடுத்து கொள்வோம்

குடாநாடு இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. ஒரு பத்தாண்டு காலகட் டம் அது. புலிகளிடமிருந்து மக்களை காக்க இராணுவம் சூரியக்கதிர் நடவடிக்கையை ஆரம்பித்து இறுதி போர்முடியும்வரை.

- இராணுவம் தனது சொந்த நலன்கருதியே வீதிகளைப் பயன் படுத்தியது.
- ஊரடங்குச்சட்டத்தை நடைமுறையில் வைத்திருந்தது.
- சத்தம் கேட்டும் திசைகளை நோக்கி துப்பாக்கிகளை இயக்கியது.
- சந்திகள், தெருக்கள், மூலை முடுக்கெல்லாம் காவலரண் அமைத்தது.

இப்படி எத்தனையோ சம்பவங்களை அடுக்கிக் கொண்டே செல்லலாம்.

- நடுவீதியில் வைத்து சமூக செயற்பாட்டாளர்கள் சுட்டுவீழ்த்தப் பட்டனர்.
- இளைஞர்கள் வெட்டிச்சரிக்கப்பட்டனர்.
- இளம் பெண்கள் வன்கொடுமைப்படுத்தப்பட்டனர்.
- பலர் இன்றுவரை இருக்கும் இடம் தெரியாமல் செய்யப்பட்டனர்.

இப்படி சொல்லமுடியாக் கொடுமைகளையும் பட்டியலிடலாம்.

நான் மேலே குறிப்பிட்டது சரி என்று வைத்துக்கொள்வோம். இங்கு பிழைத்துப்போய்விட்டது. சில கணக்குகள் இப்படித்தான் பிழைத்துப்போவது. இதை ஹத்துருசிங்க கருத்தில் கொள்ளவேண்டும்.

தென்னிலங்கை போன்று உயர்பாதுகாப்பு வல யம் வடக்கில் இருக்கமுடியாது. ஆனால் இருக்க வேண்டும்.

வழக்கம் போலவே நீங்க எது செய்தாலும் சரி எனக்குப் பதவி ஒன்று தந்தா போதும் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கிறார் அந்த தேவ தூதர். யாழ்ப்பாணத்து அமைதி(தி)க்காக பாடுபட்டவரில் இவரும் ஒருவராம். மக்களுக்கு தெரியும்.

- காட்டிக்கொடுப்புக்கள்.
- எதிர்த்தால் வேரோடுபுடுங்குதல்.
- இணங்கியிருத்தல்

தேவ கொள்கைகள் சில இவை.

பாதுகாப்புக்காக இராணுவ முகாம் இருந்தால் பரவாயில்லை என்ற கருத்து சம்பந்தப்பட்டவர் களது இருப்புக்கு அது தேவை என்பதை உணர்த்து கிறது. இங்கு பிழைத்து போவது தமிழ்மக்களது எதிர்பார்ப்பு.

முஸ்லிம் மக்கள் முஸலியில் இருந்து இடம்பெயரும்போது குறைந்த எண்ணிக் கையே. இப்போது அவர்கள் ஆறாய் பெருகியிருக்கின்றனர்.

அவர்களுக்கும் காணி வழங்கி வீடு கட்டிக்கொடுக்கவேண்டும். இந்த கருத்துக்கு மாற்று கருத்து இல்லை. மாற்றுக் கேள்வி இருக்கிறது.

- யாழ்ப்பாணத்தில் இருந்து இலட்சக்கணக்கில் மக்கள் இடம்பெயர்ந்தனர். கணிசமானவர்கள் காலப்போக்கில் மீளக் குடியமர்ந்தாலும், பல ஆண்டுகளாக இராணுவத்தின் பிடியில் இருக்கும் காணிகளைச் சேர்ந்த பல ஆயிரங் குடும்பங்கள் பல்கிப் பெருகவில்லையா?
- அப்படிப் பல்கியிருந்தால் அவர்களுக்கு எங்கு காணிகொடுத்து வீடுகட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கிறது அரசு?
- இன்றும் ஆக்கிரமிப்பில் இருக்கும் பல ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு விடு விக்கப்படுமா?

கேள்விகளுக்கு விடையும் தெரியாது. கூறவும் யாருமில்லை. அப்படியில்லை யாயின் வேண்டாவாதம் பேச சில...

இந்த மூன்று பிரச்சினைகளும் மன்னிக்க, திருத்த, மாற்ற முடியாதவையாகவே உள்ளன.

ஓதுவார் ஓத பயப்பார் பயக்க கேட்பார் கேட்பர். மாற்றம் ஏதுமில்லை.

■ பூமுகன்

Digitized by Noolaham Foundation.



■ ஹரீஸ்

# உண்மையைக் கொள்ளையிடல்

சிங்கத்தின் குகைக்குள் இருந்தபடியே சிங்கத் துக்கு எதிராகக் குரலெழுப்புவது மிகவும் ஆபத்தானது. ஆனாலும் அத்தகு துணிச்சல் மிகுந்த காரியங்களிலும் சிலர் இறங்கத் தான் செய்கிறார்கள். இலங்கை அரசின் அடாவடி முகத் திரையை கிழித்தெறியும் ஊடகவியலாளர்களை இதற்கு உதாரணமாகச் சொல்ல முடியும். சண்டேலீடர் எனும் ஆங் கிலப்பத்திரிகையின் பெரும்பான்மையாக கருத்துக்கள் அர சின் பொய்முகங்களை அம்பலப்படுத்தும் அளவுக்குப் பலம் பொருந்தியன. அத்தகைய கட்டுரைகளுக்குச் சொந்தக்காரி தான் ஊடகவியலாளர் மண் டேலன இஸ்மாயில் அபே விக்கிரமசிங்க.

சண்டேலீடரில் வெளியாகும் 'ஞாயிறுகாரம்' எனும் அரசியல் தொகுப்பின் பிரதானகட்டுரையாளர் இவர் தான். இவரின் கணவரும் அதே சண்டேலீடர் பத்திரிகையின் ஊடகவியலாளர் தான். நிரோஷ் அபயவிக் கிரம என்ற பெயரில் கொழும்பில் இருந்து அரசை விமர்சிக்கும் ஊடகவியலாளராக இவரும் விளங்குகிறார். அண்மையில் ஊடகவியலாளர் மண்டேனோ இஸ்மா யில் அபய விக்கிரம எழுதிய பல கட்டுரை கள் அரசைக் கடுமையாகச் சாடி வெளிவந் திருந்தன. "அரசின் வறட்டு பிடிவாதத்தால் நாடு முழுவதுமே அபாயகட்டத்தை நோக் கிச் சென்று கொண்டிருக்கிறது" என இவர் அண்மையில் எழுதிய கட்டுரை பெரும் சர்ச்சையலைகளை உருவாக்கியது.

வெலிவேரியாவில் தண்ணீர் கேட்டு போராடிய மக்களை நாய்கள் போல் சுட்டுத் தள்ளிய அரச பயங்கரவாதத்தை வெளிப் படையாகவே விமர்சித்திருந்தார் ஊடகவி யலாளர் மண்டேனோ இஸ்மாயில் அபய விக்ககிரம. சிங்களப்பகுதிகளிலே அரச படைகள் இப்படி காட்டுராண்டித்தனமாக நடந்து கொண்டிருந்தன என்றால் தமிழர்களின் பிரதேசமான வடக்கு கிழக்கில் எவ்வளவு கோரமாக படைகள் செயற்பட்டிருக்கும் என்ற எண்ணத்தை கட்டுரையாக வெளியிட்டவர் அவர். வெலிவேரியாவில் செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்தனர். ஒரு ஊடகவியலாளர் அன்று இரவு முழுவதும் வீட்டுக் கூரையொன்றில் உயிர்ப்பயம் காரண மாக ஒளிந்திருந்து விட்டு அடுத்தநாள் காலை காயங்களு டன் அலுவலகம் திரும்பிய கொடூரத்தையும் அம்பலப்படுத் தியவர் ஊடகவியலாளர் மண்டேனோ. அரச தரப்பை பிரதிநிதிப்படுத்தும் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர் கள், மாகாணசபைகளின் உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அரச அதிகார கிளிப்பிள்ளைகள் செய்யும் குற்றங்களை தன் ஆய்வுக்கட்டுரைக்குள் உள்வாங்கி அரசின் தகுதியீனத்தை தொடர்ந்தும் மண்டேனோ விமர்சித்து வந்தார்.

யாழ்ப்பாணத்திலும் ஏனைய பகுதிகளிலும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களை கண்டித்து ஊடக சுதந் திரத்திற்காய் குலலெழுப்பியவர். அத்துடன் உதயன் - சுடரொளிப்பத்திரிகைகள் மீது காடைக்கும்பல்கள் தமது வெறியாட்டங்களை அரங்கேற்றிய போது, அதையும் விமர்சித்தவர் ஊடகவியலாளர் மண்டேனா.

அமைச்சர்களின் பிள்ளைகள் செய்யும் திருகுதாளங் களை கண்டித்து இவர் எழுதிய பல கட்டுரைகள் பல தென்னி லங்கையில் சிங்கள மக்களிடம் அரசு பற்றிய எதிர்மறை அபிப்பிராயத்தையும் ஏற்படுத்த தவறவில்லை. பிரகீத் காணாமல்போன போது சண்டேலீடர் பத்திரிகையில் அர சியல் விமர்சனத்தில் ஏற்பட்ட தளம்பல் நிலையை தன் கட்டுரைகளால் நிரப்பியவர் மண்டேனா. இலங்கை அர சின் அடாவடி அமைச்சரொருவரே 'தன் மீதும் தனதுமகன் மீதும் சண்டேலீடர் தேவையற்ற அவதூறுகளை பரப்புகிறது. நடவடிக்கை எடுப்பேன்' என வெளிப்படையாகக் தெரிவிக்கும் அளவுக்கு சண்டேலீடர் பத்திரிகையில் இவர் எழுதும் பத்தி பிரபலமானது.

## நள்ளிரவு ஊடுருவல்

. "நள்ளிரவை தாண்டிய பொழுது. ஊடகவியளாளர் மண்டேனோ இஸ்மயில் அவர் மகன் தாயார் ஆகியோர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தனர். திடீரென கொழும்பு பம் பலப்பிட்டிப் பகுதியில் அமைந்துள்ள அந்த வீட்டின் பின் பக்கமதிலிடன் ஊடாக ஏறிப்பாய்ந்து உள்ளே பிரவேசித்தது ஒரு மர்மக் கும்பல். ஊடகவியலாளர் மண்டேனோ இஸ்மயி லின் கணவர் இரவுக்கடமைக்காக அலுவலகம் சென்றிருந் தார். ஆகவே வீட்டில் எந்த ஆண்களும் இல்லையென உறுதிப்படுத்திய பின்னரே இனந்தெரியாதவர்களின் பாய்ச் சல் நிகழ்ந்தது. வீட்டின் மேல் பாகத்திலிருந் ஜன்னலை பிரித்தவாறு சத்தம் சந்தடியின்றி உள்நுழைந்து விட்டனர். வந்தவர்கள் முதல் வேலையாக வீட்டின் தொலைபேசி இணைப்பை அறுத்தெறிந்தனர். அறையொன்றுக்குள் பிர வேசித்த அந்தக் கும்பல் ஊடகவியலாளர் மண்டேனோவின் இளைய மகனை பயணக்கைதியாக பிடித்தனர்.

தமது முகங்களை துணிகளால் மூடிக்கட்டியபடி இருந்த அந்த மர்ம நபர்களின் கைகளில் கத்திகளும் கைக்குண்டு உட்பட ஆபத்தான ஆயுதங்களும் பளிச்சிட்டன. பயந்து போன அந்த சிறுவனிடம் "உன் அம்மா அப்பா என்ன வேலை?" என்று மிரட்டினர். அத்தோடு வீட்டில் ஆவ ணங்கள் வைக்கும் பகுதிகள் பற்றியும் தாயாரின் தொழில் உபகரணங்கள் வைத்திருக்கும் பகுதிகள் பற்றியும் அவர் கள் துருவித் துருவி விசாரித்தனர். விழித்தெழுந்த மண்டேனோ இஸ்மயிலும் கத்தி முனையில் நிறுத்தப்பட்டார்.

வீடு சல்லடை போட்டு தேடப்பட்டது. வீட்டில் நிறைந் திருந்த கோப்புகள் ஆராயப்பட்டன. அப்போது விழித்துக் கொண்ட மண்டேனோவின் தாயார் நடப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். வீட்டில் மையப்பகுதிக்கு ஓடிவந்தார். அவரைப்பிடித்த ஒருவன் இழுத்துச் சென்று அறை ஓரமாகத் தள்ளிவிட்டான். அறைக்குள் விழுந்த அவர் . புத்திசாதுரி யமாக யாருக்கும் தெரியாமல் அங்கிருந்த கைத்தொலை பேசியை எடுத்து அண்டேனாவின் கணவரான றோமேஷ் அபயவிக்கிரமவிற்கு தகவலை வழங்கினார். உடனே ஊடகவியலாளர் றோமேஷ் வீட்டில் ஏதோ களேபரம் நடக் கின்றது என்பதை உணர்ந்து அவசர பொலிஸ் இலக்கமான 119 இற்கு தகவலை வழங்கினார். நொடியில் சீறிக்கொண்டு வீட்டை நெருங்கிய பொலிஸார் யாரும் தப்பிப் போகாதவாறு வீட்டை முற்றுகையிட்டுக் கொண்டனர். நேரம் 3.30 தாண்டி யிருந்தது. பொலிஸாரின் வருகையை கண்டு பதறிய இனந்தெரியாதவர்கள் தாம் வந்த வீதி வழியூடாகவே தப்பிச் செல்ல முயன்றார். வெளியே அவர்கள் தப்பிச்செல்ல ஓட்டோ ஒன்றும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் பொலிஸாரின் முற்றுகையை அவர்களால் உடைக்க முடியவில்லை. மர்மக்கும்பலை நெருங்க முயன்றனர் பொலிஸ் அதிகாரி ஒருவர். அடுத்த நிமிடம் அந்த இனந்தெரியாத கும்பலின் கைகளில் இருந்த கத்தி அந்தப் பொலிஸ் அதிகாரியின் கழுத்தை பதம் பார்த்தது. வெறியேறிவர்கள் போலானார்கள் பொலிஸார். அவர்களின் கைகளில் இருந்த துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கின. அடுத்த நிமிடமே கத்தியால் தாக்கியவனின் மேனியெங்கும் சல்லடை போட்டது பொலிஸாரின் துப்பாக்கி. அடுத்தடுத்து ஏனையோரும் கலைத்துக் கலைத்துச் சுடப்பட்டனர். ஒருவன் கொல்லப்பட, அவனுடன் வந்த நால்வர் படுகாயமடைந்து கிடந்தனர். மோதலில் பொலிஸ் அதிகாரிகள் மூவருக்கு காயங்கள் ஏற்பட்டது. ஒரு நிமிடத்திற்குள் அனைத்தும் நடந்துபோனது.

### மறைக்கப்படும் உண்மை

*'வெறும் கொள்ளை முயற்சி என்று பொலிஸாரால் மூடிமறைக்கப்பட்ட இந்தச் சம்பவம் பல்வேறு சந்தேகங்களை தவிர்க்க முடியாமல் கிளப்புகிறது. வீட்டின் ஆவணங்கள் பரிசோதிக்கப்பட்டு வீடு கொள்ளையிட உகந்ததா என ஆரா யப்பட்டு கொள்ளையிடும் அளவுக்கு வந்த கொள்ளையர்கள் முட்டாளாக இருக்கமுடியாது. வந்தவர்கள் கொள்ளை யிட வந்தவர்கள் என்றால் ஏன் வீட்டுக்காரரின் தொழில் விபரங்கள்' அவர் என்ன வேலை போன்ற விபரங்களை ஆராய வேண்டும்? சுமார் ஒன்றரை மணிநேரம் வீட்டை சல்லடை போட்டு தேடும் அளவிற்கு அவர்கள் என்ன விடயத்தை தேடினர். சாதாரண நகைகள் பணம் என்றால் ஏன் வீட்டின் ஆவணங்கள் கோப்புகள் பரிசீலிக்கப்பட வேண்டும்? மொத்தத்தில் வந்த இனந்தெரியாதவர்கள் ஏதோ ஒன்றை தேடிவந்திருக்கிறார்கள். இணையத்தளம் ஒன்றின் தகவலின் படி அரச தரப்பு பிரதிநிதி ஒருவரை பற்றிய சிலஆதாரங்கள் ஊடகவியலாளருக்கு கிடைத்திருக்கின்றது. அதைத்தேடவே அவர்கள் வந்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுகின்றது.*

*மொத்தத்தில் ஊடகத்துறை மீது மீண்டும் இனந்தெரியாதவர்களின் பார்வை திரும்பியிருக்கிறது. வந்தவர்கள் இராணுவத்தை சேர்ந்தவர்கள் என்று ஒருதரப்பும் மறுதரப்பு இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் என்றும் கூறிக்கொள்கிறது. அரசு பழைய குருடி கதவைத்திறவடி கதையாக மீண்டும் இனந்தெரியாதவர்களை கைகளில் எடுத்திருக்கிறது.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு

தொகுப்பு : வரு

## விலை சரிதானா?

2013/2014 ஆம் ஆண்டுக்கான உதைபந்தாட்ட பருவகால போட்டிகளுக்கான வீரர்கள் பரிவர்த்தனைகள் முடிவுக்கு வரப்போகின்ற நிலையில் , வீரர் ஒருவரை வாங்குவதில் உலக சாதனை நிகழ்த்துவதற்கு ஸ்பெயினின் முன்னணி கழகங்களில் ஒன்றான ரியல் மட்ரிட் தயாராகியுள்ளது. சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்த வீரர்கள் பரிவர்த்தனை சந்தை ஆரம்பித்த நாளிலிருந்தே தங்களது அணிக்காக இங்கிலாந்து பிராந்திய கழகமான டொடின்ஹாம் ஹொஸ்பர் அணியின் நட்சத்திர வீரர் கோர்த் பேலை ஒப்பந்தம் செய்வதில் ரியல் மட்ரிட் அணி முனைப்பு காட்டி வந்தது. ஆரம்பத்தில் இரு கழகங்களுக்கு இடையில் விலை நிர்ணயம் செய்வதில் இணக்கப்பாடு ஏற்படாத படியினால் தாமதமாகிக்கொண்டு வந்த இந்த வீரரின் விற்பனைக்கு தற்போது சுமுகமான ஒரு முடிவு எட்டப்பட்டுள்ளதாக தெரிகிறது. டோடின்ஹாம் அணி நிர்ணயித்த 100 மில்லியன் யூரோக்கள் என்ற விலையினை கொடுத்து கோர்த் பேலினை விலைக்கு வாங்குவதற்கு ரியல் மட்ரிட் கழகம் முன்வந்துள்ளது. இன்னும் சில நாள்களில் நிகழ்ந்து விடவிருக்கும் இந்த ஒப்பந்தம் வீரர் ஒருவரின் விற்பனையில் புதிய சாதனையை படைக்கவிருக்கின்றது. உதைபந்தாட்ட உலகில் வீரர் ஒருவரை அதிக விலை கொடுத்து வாங்கியதில் இதற்கு முன்னர் மன்செஸ்டர் யுனைட்டட் அணியில் இருந்து கிறிஸ்டியானோ ரொனால்டோவை ரியல் மட்ரிட் அணியானது 93 மில்லியன் யூரோக்களுக்கு வாங்கியமையே இதுவரை உலக சாதனையாக இருந்து வந்தது.



100 மில்லியன் யூரோக்களுக்கு கோர்த் பேலினை ஒப்பந்தம் செய்வதன் மூலம் தங்களது முந்தைய சாதனையை முறியடிக்க தயாராகி வருகின்றது ரியல் மட்ரிட். ஆனாலும் 100 மில்லியன் யூரோக்களுக்கு கோர்த் பேல் பெறுமதியானவர் கிடையாது என உதைபந்தாட்ட ஜாம்பவான்கள் பலரும் கருத்து தெரிவித்து வருகின்றனர். அத்தோடு கோர்த் பேலின் ரியல் மட்ரிட் பிரவேசம் குறித்து ரியல் மட்டிட் அணியின் நட்சத்திர வீரரும் தற்போது வரை உலக சாதனையான 93 மில்லியன் பரிவர்த்தனைக்கு சொந்தக்காரருமான போர்த்துக்கல்லின் கிறிஸ்டியானோ ரொனால்டோ அதிருப்தியில் உள்ளதாக ஸ்பானிய ஊடகங்கள் கருத்துக்களை வெளியிட் டுள்ளன.



## மலிங்க அவுட்

சிம்பாப்வேயிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், சிம்பாப்வே அணிக்குமிடையிலான கிரிக்கெட் தொடரிலும், சம்பியன்ஸ் லீக் 20/20 தொடரிலும் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க பங்குபற்ற மாட்டார் என எதிர்பார்க்கப்படுகிறது. தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் விடுப்புக் கோரியுள்ளதன் காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பான கோரிக்கையை லசித் மலிங்க இலங்கை கிரிக்கெட் சபையிடம் விடுத்துள்ளதுடன், அந்தக் கோரிக்கை தொடரபான முடிவு இன்னமும் எடுக்கப்படவில்லை. ஆனால், தனிப்பட்ட காரணங்களுக்காக அவர் விடுப்புக் கோரியுள்ளதன் காரணமாக அவரது கோரிக்கை ஏற்கப்படுமெனத் தெரிய வருகிறது. சம்பியன்ஸ் லீக் 20/ 20 தொடரில் லசித் மலிங்க பங்குபற்றாது விட்டால், அவ்ரது வருடாந்த ஐ.பி.எல் ஊதியத்தின் 20 சதவீதத்தை அவர இழக்க வேண்டியிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சி.பி.எல். சம்பியனாக ஜமைக்கா



கரபியன் பிறீமியர் லீக் தொடரின் சம்பியனாக ஜமைக்கா அணி தெரிவாகியுள்ளது. கயானா அணியை இறுதிப் போட்டியில் வீழ்த்தியே அவ் வணி சம்பியன்களாகத் தெரிவாகியுள்ளது. குயீன்ஸ் பார்க் ஒவல் மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் ஜமைக்கா அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.



இப்போட்டியில், முதலில் துடுப்பெடுத்தாடிய கயானா அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 128 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. 129 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு ஆடிய ஜமைக்கா அணி 17.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்திருந்தது. அணித்தலைவர் கிறிஸ் கெயில் பொறுமையாக ஆடி அணியை வெற்றி நோக்கி அழைத்துச் சென்றார்.

இலங்கையில் நடைபெற்று வந்த மாகாண அணி களு க்கிடையி லான 20/ 20 தொடர் முடிவுற்றதும், இலங்கையணியின் குமார் சங்கக்காரா, மஹேல ஜெயவாத்தன, லசித் மாலிங்க ஆகியோர் சி. பி.எல். போட்டிகளில் பங்குபற்றியிருந்தனர். இதில் சங்கக்காரா ஜமைக்கா அணியில் இடம்பெற்றது ன், அரையிறுதிப் போட்டியில் அரைச்சதம் ஒன்றையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தார்.

இதேவேளை, எதிர்வரும் சம்பியன்ஸ் லீக் 20/ 20 தொட ரில் குமார் சங்கக்கார பங்குபற்ற விரும்பும் அணியை அவரே தெரிவு செய்யலாம் என அறிவிக்கப்பட் டுள்ளது. இதன் காரணமாக கந்துரட்ட அணியிலோ, ஹைதராபாத் சண்ரைசரஸிலோ பங்குபற்றும் தெரிவு குமார சங்கக்காரவிற்குக் கிடைத்துள்ளது. குமார் சங்கக்காரவின் அணிகளான ஹைதராபாத் சண் ரைசரஸ், கந்துரட்ட ஆகிய இரு அணிகளும் சம்பியன்ஸ் லீக் 20/20 தொடருக்குத் தகுதி பெற்றுள்ள நிலையில், அவர் எந்த அணிக்காகப் பங்குபற்றுவார் என்று இன்னமும் முடிவை அறிவிக்கவில்லை.


சண் ரைசரஸ் அணியை விடுத்து, கந்துரட்ட அணி சார்பாக இத் தொடரில் விளையாடுவதற்குக் குமார் சங்கக்கார முடிவு செய்வாராயின் அவரது ஐ.பி.எல் ஊதியத்தின் 20 சதவீதத்தை அவர் இழக்க வேண்டி ஏற்படும். இது 140,000 ஐக்கிய அமெரிக்க டொலர் களாகும். மறுபுறத்தில் சண் ரைசரஸ் ஹைதராபாத் அணி சார்பாக விளையாடுவதற்கு குமார் சங்கக்கார தெரிவு செய்யப்பட்டால், கந்துரட்ட அணிக்கு சண் ரைசரஸ் அணி 150,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களை இழப்பீடாக வழங்குமென்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## அமைதியைத் தேடி




அமைதி எனைப் பிரிந்து
ஆழ் உறக்கம் கொள்கிறதே?
அணைந்து விட்டதோ தீபம் – மழையில்
நனைந்து போனதால்....

நேற்றைய காற்றலையில்
கரைந்து விட்ட கனவுகளை
மீண்டும் நனவாக்க விரைகின்றேன்
அமைதியைத் தேடி

–சு.ஜெயகிஸ்ணா
முல்லைத்தீவு

## எல்லைகள்

–இலக்கியா.



வா ஒருமுறை-உன்
வசந்தத்தை
என் பாலைவனத்தின்
மணல் படுக்கைகளில்
பரப்பிவிட்டு செல்!

ஓ!
உன் சிறகுகள்
எல்லைக்கோடுகளில் சிக்கினவோ?
உடைத்தெறியென்கிறேன்
அடடா என்ன அதிசயம்
புன்னகைக்கிறாய்
கண்ணிமைகள் கழுவப்படுகின்றன
அந்தோ பரிதாபம்
உன் சின்னச் சிறகுகளில்தான்
எத்தனை சுமைகள்?
ஐயய்யோ..
சின்னச்சின்னதாய் உடைகிறதே
என் பல்லவியை கொஞ்சம் மாற்றுகிறேன்
பொறு! பொறு!
உன் பாலைவனத்தில்-என்
வசந்தகால இலைகளை
புரப்புகிறேன்
சின்னதாய் எனக்குள் கூடுகட்டு
ஏன்வேர்கள் இருக்கும்வரை
உன்னோடு நான் இறக்கும்வரை
நீ வேடந்தாங்கலில்லையே
எனைவிட்டு செல்ல?

## அதுவரை



அழுதே எங்கள் கவலைகள் தீருமெனில்
உலகே கடலாகி விடாதோ?
பழியே தெரியாமலா
உலகம் வலியைத் தந்தது
மலிவாகிப் போனது
தமிழ் உயிர் என்பதாலா
உலகம் வழி சொல்லி நின்றது
எம் விழி கண்ணீர் வடித்திங்கு
துடித்திட்ட நேரம்
உலகோ விருந்துண்டு மகிழ்ந்தது
பருந்தின் கால் அகப்பட்ட
குஞ்சாகத் துடிக்கையில்
உலகம் பருந்துக்கே
பல வகை மருந்துகள் கொடுத்தது
வருந்தியே பல உயிர்
அழித்திட்டபோதும் – உலகோ
முகம் திருப்பிக் கொண்டது
வருமானம் பார்த்துத்தான்
மனிதாபிமானம் என்பது
லிபியாவுடன் புரிந்துதான் போனது
அதர்மம் நிலைத்ததாய் அகிலத்தில்
அது அழிந்திடும் அதுவரை வருந்துவோம் நாமே!



– ஆத்மார்தன்
யாழ்ப்பாணம்.

## பச்சைவீட்டு விளைவு



இனம் புரியாத இரசாயனத்தாக்கம்
இதயத்தில் நடப்பதினால்
மனப் பிராந்தியம் கெட்டு
மாசாகிப் போகிறது

இனவாத எரிமலை வெடித்து
எழும்பும் விசவாயு பலவும்
மதவாதப் புயலுடன் கலந்து
மனிதமுடன் மல்லுக்கட்டுது

இன மதவிணக்க நம்பிக்கை
ஓசோன் படை ஓட்டையினால்
வரும் பேரினக் கதிர்வீச்சால்
வளர்கிறது வெறுப்பு புற்றுநோய்

அதிகாரப் பச்சைவீட்டு விளைவு
அத்துமீறிப் போவதனால்
சமத்துப் புவி வெப்பச்
சமநிலையில் குழப்பம்

வல்லரசுத் துருவப் பிரதேச
வல்லாதிக்கப் பனி உருகி
அபிவிருத்தி கால்வாயால் வந்து
ஆக்கிரமிப்பு நீர்மட்ட அளவு கூடுகிறது


துவேச அமிலமழை தூறி
துக்கிரித்தன வெள்ளம் ஏறி
சிறுபான்மைப் பயிர்கள் எரிந்து
சிறுமைப்படுகின்றன

சூழலைக் காக்க மனதைச்
சுத்தமாக்க வேண்டும் மதச்
சுதந்திரக் காற்று எங்கும்
சுற்றிவர வேண்டும்

மானுடம் வளர்ந்து
மறுவாழ்வு பெறவேண்டும
காணுமிடமெங்கும் மனிதம்
காட்சி தரவேண்டும்

காரைக்கவி.

## நேசிப்பதற்கான சுவாசம்....



உன்னை நேசித்துக் கொண்டு
இருப்பதற்காகவா நான்
சுவாசித்துக் கொண்டு இருக்கிறேன்
புரியவில்லையடா எனக்கு
சில சமயம் என் அருகில் வந்து
பூக்கள் நீட்டுகிறாய்
பல சமயம் விலகிச் சென்று
அவஸ்தைகளும் தருகின்றாய்
உயிரே ஏன் உனக்கு
இத்தனை பிடிவாதம்
ஒரே ஒரு தடவை உன்னை
எனக்கென எழுதிக்கொடு
என் ஆயுளை விற்றாவது
உன் சுவாசங்களுக்கு
தென்றலை வாங்கி வருவேன்....

–ப்ரியா
கொக்குவில் மேற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப். 04 , – 10, செப்., 2013

sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

## புறக்குடத்துத் தண்ணீர்

எல்லோரும் எதிர் பார்த்திருந்த நவநீதம்பிள்ளையின் இலங்கை வருகை முடிவுக்கு வந்து விட்டது. என்னதான் அவரது கண்களில் படாமல் இலங்கையின் பொட்டுக் கேடுகளை அரசு மறைத்தாலும், ஏதோ ஒரு வகையில் நவிப்பிள்ளையின் காதுகளுக்கு தமிழர்களின் கதறல் கேட்கவே செய்திருக்கிறது. யாழ். பொது நூலகத்துக்கு முன்னால் காணாமல் போனோரின் உறவுகள் திரண்டு வந்து, கண்ணீர் கடலை உற்பவித்த போதும், அதனை நவிப்பிள்ளை பார்க்க முடியாத வகையில் அதிகாரிகள் அவரை திசை திருப்பி வேறு பக்கம் கொண்டு சென்று விட்டனர். அழிந்து போன கோலத்தை கூட சரிசெய்ய நினைக்கும் நவிப்பிள்ளை, சிதைந்துபோன மக்களின் வாழ்வை சரிசெய்யக் கூடாது என்பதில் சிலர் குறியாக இருந்தார்கள்.

பொறுத்துப்பார்த்த நவிப்பிள்ளை ஒருகட்டத்தில் அரசின் நிகழ்ச்சிநிரலை தூக்கி எறிந்து விட்டு, உடனடியாகவே தனக்கேற்ற வகையில் சில சந்திப்புக்களை மேற்கொள்ளவும் தவறவில்லை. இறுதிப் போர் நிகழ்ந்த முள்ளிவாய்க்காலுக்குச் சென்ற அவர், திடீரென ஒரு பிளாஸ்ரிக் கதிரையில் அமர்ந்து கொண்டு மக்களின் குறை கேட்கத் தொடங்கிவிட்டார். எவரும் எதிர்பாராத வகையில் நவிப்பிள்ளை திடீரென தீர்மானித்த நிகழ்வால் அரச தரப்பு ஒரு கணம் ஆடிவிட்டது. என்ன செய்வது என்று தெரியாமல் வெறும் கையை மட்டுமே அவர்களால் பிசைய முடிந்தது. ஆனால் மக்கள் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியாகப்பயன்படுத்திக் கொண்டு மடை திறந்தவெள்ளம் போல தங்கள் மனக்குறைகளை எல்லாம் நவிப்பிள்ளையிடம் கொட்டிவிட்டார்கள்.

அதன் விளைவாகவே இலங்கைசர்வதிகார பாதையில் பயணித்துக் கொண்டிருப்பதாக நவிப்பிள்ளைசொல்லிவிட்டுப் போனார். ஆனால் அவருடை இந்த வார்த்தைகளை வழக்கம் போலவே தூக்கி எறிந்திருக்கிறது இலங்கை.

"நவநீதம்பிள்ளை ஏற்கெனவே தயார் செய்துவைத்திருந்த அறிக்கையையே ஒப்புவித்துவிட்டுப் போயிருக்கிறார். அவர் சுய புத்தியில் சொல்லவில்லை. அவர் சொன்னது போல இங்கு சர்வாதிகரப் பாதையில் இலங்கை செல்லவுமில்லை" என்று அவரின் கருத்தை ஒரேயடியாக நிராகரித்துவிட்டது அரசு. மற்றவர்கள் சொல்வதைக் கேட்கும் பக்குவம் கூட இல்லாத ஆட்சியாளர்கள் எப்படி எங்களின் உரிமைக் குரலுக்கு செவிசாய்ப்பார்கள்? பாவம் நவநீதம்பிள்ளை. தன்னுடைய கருத்தும் புறக்குடத்துத் தண்ணீர்தான் என்று தெரியாமல் அறிக்கையையும் நேரத்தையும் வீணாக்கி விட்டாரே.

■ வி.கே.எம்.

# கணக்குக்காட்டல்

## அபிவிருத்திப் புள்ளிவிவரங்களுடன் வந்த அரச அதிபர்கள்



**'நான்** வந்திருப்பதன்நோக்கம் ஐ.நாவின் கொள்கைகள் எல்லா மட்டங்களிலும் நடைமுறையில் உள்ளதா என்பது குறித்து ஆராய்வதற்கு, இலங்கையின் வடக்கு கிழக்கில் வாழும் மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் மனித உரிமைகள் குறித்து தரவு சேகரிப்பதற்கு' பொது நூலகத்தில் நடைபெற்ற நிகழ்வின் இறுதியில் உரையாற்றிய நவநீதம்பிள்ளை தெரிவித்தார். அவர் இப்படி ஒரு கருத்தை கூறுவதற்கு காரணம் எங்கள் அதிகாரிகள் தான்.

### பொருளாதார முன்னேற்ற அறிக்கை

நவநீதம்பிள்ளையை உலக பொருளாதார, அபிவிருத்தி ஆய்வாளராக நினைத்து ஏகப்பட்ட பைல்களுடன் வந்திறங்கிய வடமாகாண அரச அதிகாரிகள், போருக்குப்பின்னர் கண்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து மல்ரி மீடியா புரஜெக்ரர் மூலம் 'பிரசன்ரேசன்' நடத்தினர். எல்லாவற்றையும் பார்த்து சிரித்துக்கொண்டே இருந்தார் நவி.

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்து நிறைவேற்றிய தீர்மானத்தின் பிரகாரம் இலங்கையில் மனிதஉரிமைகள் விடயத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஆராயும் பொருட்டு ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது அவர் தனது நேரடி அவதானிப்புக்காக வடபகுதியை தேர்ந்தெடுத்தார். குறிப்பாக போரால் பாதிக்கப்பட்ட பகுதியை அவதானிப்பது அவரது நோக்கமாக இருந்தது.

கிட்டத்தட்ட போர் இடம்பெற்ற இடத்தை நவிப்பிள்ளை பார்வையிட்டாரா என்பது சந்தேகமே. ஏனென்றால் உண்மையில் போர் நடைபெற்ற இடங்கள் விசேடமாக உருமறைப்புச்செய்யப்பட்டுவிட்டன நவி வருகைக்கு முன்னரே. அதனால் அவரை ஆச்சரியப்படுத்துமளவுக்கு ஒன்றும் இருக்கவில்லை. பதிலாக அரச அதிகாரிகள் நடந்துகொண்ட விதமே அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

வடக்கு ஆளுநர், செயலர் உட்பட ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த அரச அதிபர்களும் வடக்கில் நடைபெற்ற, நடைபெறும் அபிவிருத்தி வேலைகளை விளக்கினர்.

வடக்கின் வசந்தம், மஹிந்தோதைய அபிவிருத்திகள் குறித்து ஜனாதிபதி, அமைச்சர்களது வர்ணப்படங்களை பின்னணியாகக் கொண்ட 'சிலைற்றுகள்' விரிந்து கொண்டிருந்தன.

'ஓ! அப்படியா?' என்று பார்த்துக்கொண்டிருந்தார் நவி.

ஆர்வத்தின் மிகுதி ஒவ்வொரு அரச அதிகாரிகளது முகத்திலும் தெரிந்தது. அவர்கள் பார்வையில் நவிப்பிள்ளை ஒரு பொருளாதார முன்னேற்ற ஆய்வாளராக இருந்திருந்தால் எவ்வளவு பயனுள்ளதாக இருந்திருக்கும்? எதுவோ எங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பம் இதுதான். விட்டுவிடாமல் விளாசுவோம் என்று எல்லா அபிவிருத்தி வேலைகளையும் பட்டியலிட்டனர் அவர்கள்.

ஒரு அதிகாரிகூட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை குறித்து வாய் திறக்கவில்லை.

### உரிமை வேறு அபிவிருத்தி வேறு

பொதுவான உலக நடைமுறைகளின் கீழ் ஒருநாட்டில் வாழும் மக்கள் சட்டரீதியாகவும் பண்பாட்டு, கலாசார ரீதியாகவும் பெற்றுக்கொள்ளும் அம்சங்களை உரிமைகளாக வகைப்படுத்தலாம். இவை உலக வரன்முறைக்கமைய மக்களுக்கு வழங்கப்பட வேண்டியவை.

உரிமைகள் குறித்த மிகப் பிந்திய கருத்துருக்கள் சமத்துவ நோக்கம் கொண்டவை. அதாவது, எல்லோருக்கும் சம உரிமை என்பதாகும். உரிமைகள் தொடர்பாக தற்காலத்தில் இரண்டு முக்கியமான கருத்துக்கள் நிலவுகின்றன. ஒன்று, இயல்புரிமை. இது, ஒரு நாடு, ஒரு இனம், ஒரு குழுவுக்கு இயற்கையாக அமைந்த உரிமையைக் குறிக்கிறது. இதில் எந்த மனித சக்தியும், முறையாக மாற்றம்

➡



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே... எங்கே... உறவுகள் எங்கே..?



பிரமன்

நாடெங்கும் போர் பற்றி எரிந்த போது சுற்றி வளைப்பு, காட்டிக் கொடுப்பு, சந்தேகம், விசாரணை என பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழ் இளையோர் காணமல் போயினர். இவர்களில் சிலர் பின் வந்த நாள்களில் சடலங்களாக வீதிகளில் மீட்கப்பட்டிருந்தனர். இன்னும் சிலர் விசாரணைகளின் முடிவில் விடுவிக்கப்பட்டிருந்தனர். ஆனால் நிறையப் பேரின் கதை பல தசாப்தங்களாக தெரிய வரவேயில்லை காணாமல் போனோரின் உறவுகள் தங்கள் பிள்ளைகளைத் தேடி தட்டாத இராணுவ முகாம்கள் இல்லை. முறையிடாத தொண்டு நிறுவனங்கள் இல்லை. நேர்த்தி வைக்காத கடவுளர்கள் இல்லை.

அம்புலி மாமா கதைகளில் அதிகம் பிரசித்தமானது விக்கிரமாதித்தனும் வேதாளமும்தான் . இந்தக் கதையில் ஒவ்வொரு முறையும் முருங்கை மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் வேதாளத்தை வெட்டி வீழ்த்தி, தோளில் சுமந்து கொண்டு செல்வான். கடைசி இலக்கு வரை மௌனமாகச் சென்றால் மட்டுமே வேதாளம் ஓடாமல் இருக்கும். என்றாலும் புதிர் நிறைந்த கதை ஒன்றைச் சொல்லி அவனது மௌனத்தை கலைத்து விட்டு தப்பித்துச் சென்று விடும் வேதாளம். ஆனால் தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் தொடர்ந்தும் வேதாளத்தை வெட்டி வீழ்த்துவதிலேயே ஈடுபடுவான்.

யாருக்காகவோ விக்கிரமாதித்தனே இவ்வளவு தூரம் சிரமப்பட்டு தன் முயற்சியைக் கைவிடாத போது, பத்து மாதம் சுமந்து, பாலூட்டி சீராட்டி வளர்த்து ஆளக்கிய பிள்ளைகளை பறிகொடுத்து விட்டு,அவர்கள் இருக்கிறார்களா இல்லையா? என்பதுகூடத் தெரியாமல் தவிக்கும் தாய்மார் மட்டும் தங்கள் முயற்சியை கைவிட்டு விடுவார்களா?

விடா முயற்சிக்கு எப்போதும் பலன் கிடைக்காமல் விட்டதில்லை. காலன் கவர்ந்து சென்ற தன் கணவனின் உயிரை விடாமல் பின் தொடர்ந்து சென்று மீட்ட சாவித்திரியின் கதை தமிழில் உண்டு. அந்தச் சாவித்திரியின் பரம்பரையில் வந்தவர்கள் தங்கள் கண் முன்னே படைகளிடம் கையளித்த பிள்ளைகளை மீட்காமல் ஓயப் போவதில்லை என்பதையே தொடர் கதையாகிக் கொண்டிருக்கும் காணமல் போனோரின் உறவுகளின் போராட்டங்கள் சொல்கின்றன.

நாடெங்கும் போர் பற்றி எரிந்த போது சுற்றி வளைப்பு, காட்டிக் கொடுப்பு, சந்தேகம், விசாரணை என பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழ் இளையோர் காணமல் போயினர். இவர்களில் சிலர் பின் வந்த நாள்களில் சடலங்களாக வீதிகளில் மீட்கப்பட்டிருந்தனர். இன்னும் சிலர் விசாரணைகளின் முடிவில் விடுவிக்கப்பட்டிருந்தனர். ஆனால் நிறையப் பேரின் கதை பல தசாப்தங்களாக தெரிய வரவேயில்லை காணாமல் போனோரின் உறவுகள் தங்கள் பிள்ளைகளைத் தேடி தட்டாத இராணுவ முகாம்கள் இல்லை. முறையிடாத தொண்டு நிறுவனங்கள் இல்லை. நேர்த்தி வைக்காத கடவுளர்கள் இல்லை. ஆனால் எல்லாமே பொய்த்துப் போனது இருக்கிறார்களா இல்லையா என்பது கூட தெரியாத நிலையில் அல்லும் பகலும் காணாமல் போனோரை நினைத்து அழுது புலம்ப வேண்டிய வாழ்வு மட்டுமே அவர்களுக்கு நிலைத்தது.

இந்த நிலையில் தான் போர் முடிவுற்ற காலத்தில் படையினரால் ஏராளமான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் புலிகள் என்ற சந்தேகத்தில் பிடிக்கப்பட்டார்கள். இதை விட "நாங்கள் புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் தான்" என்று தாமாகவே படையினரிடம் பலர் சரணடைந்தார்கள். ஒரு குறுகிய காலத்தில் பல்லாயிரக் கணக்கில் தமிழ் இளைஞர்கள் காணாமல் போனது இந்தக் காலத்தில் தான். சரணடைந்தவர்களும் பிடிக்கப்பட்டவர்களும் எங்கே என்று உடனடியாக அவர்களது உறவுகளால் அறிய முடியவில்லை. ஏனெனில் அவர்கள் திறந்த வெளிச் சிறைச்சாலைகளான நலன்புரி நிலையங்களில் அடைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டனர். அங்கிருந்து வெளியே வந்த பின்னர்தான் தம் உறவுகளை தேடியலையத் தொடங்கினர். எங்கும் கண்ணீர் பெருக்கெடுக்கத் தொடங்கியது. ஆரம்பத்தில் தனியன்களாக இந்தத் தேடலில் இறங்கிய உறவுகள் மெல்ல மெல்ல தம்மைப் போலவே பிரியத்துக்குரியவர்களை தொலைத்து விட்டு அலைந்து திரியும் தம்மைப் போன்ற பலரையும் இணைத்துக் கொண்டு கூட்டாக போராட முற்பட்டனர்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வுகளின் போது ஆரம்பித்த இந்த உறவுகளைத் தேடும் படலம் நவநீதம் பிள்ளையின் வருகை வரை நீள்கிறது. இனியும் தொடரும். ஆனால் "எங்கே எங்கள் உறவுகள்? அவர்களை மீட்டு எம்மிடம் தாருங்கள்" என்று ஒவ்வொரு முறையும் தங்கள் கூட்டுக் கண்ணீரோடு ஒலிக்கும் இவர்களின் கதறல் இதுவரை யாருடைய காதிலேனும் கேட்டதாக தெரியவில்லை. கேட்டிருந்தால் இப்போதைக்கு காணாமல் போனோர் மீண்டிருப்பார்களே. நவநீதம் பிள்ளையிடமும் நீதி கேட்க முடியாதபடி இவர்களின் குரல்களை திட்டமிட்டு அமுக்கினாலும், எல்லாவற்றையும் உடைத்துக் கொண்டு,கண்ணீர் ஆறு உலகம் முழுதும் உண்மையை உரைக்கத்தான் போகிறது.

---

# கணக்குக்காட்டல்

செய்ய முடியாது. இரண்டாவது, சட்ட உரிமை.

இது, உரிமை என்பது சமுதாயத்தால் ஆக்கப்படுவதும், அரசால் நடை முறைப்படுத்தப்படுவதும், மாற்றங்களுக்கு உட்படக்கூடியதுமான மனித உருவாக்கம்.

அபிவிருத்தி என்பது இதிலிருந்து மாறுபடுகிறது. அதாவது ஒருநாட்டின் சமூக,பொருளாதார நிலைகளில் படிப்படியாக ஏற்படுத் தப்படும் வளம்மிக்க மாற்றமே அபிவிருத்தி எனப்படுகிறது.

மனித உரிமைகள் அபிவிருத்திக்குள் உள்ளடக்கப்படகூடியவை என்ற அடிப்படை நிலவி வந்தாலும் எல்லா மட்டங்களிலும் இவை பின்பற்றப்படாமையே முரண்பாட்டுக்கு காரணமாகிறது.

இலங்கையில் தற்போது பெரும்பாலான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முரண்பாட்டுடன் கடியவையாகக் காணப்படுவதே பிரச்சினையாகும். தேசிய கொள்கைகளுக்கு உட்பட்ட அபிவிருத்தி திட்டங்களால் இனம் சார்ந்த, சமூகம்சார்ந்த உரிமைகள் மதிக்கப்படாத நிலை தோற்றுவிக்கப்படுகிறது.

இதுவே ஆரம்பம் தொட்டு இன்றுவரையான முரண்பாட்டு தோற்றுவாய்களாகக்காணப்படுகின்றன.

இந்த அடிப்படையில் நவிப்பிள்ளையிடமும் எமது அதிகாரிகள் முரண்பாட்டு தோற்றுவாய்களைக் காண்பித்து, இங்கு மக்களுக்கு பிரச்சினை கிடையாது என்று விளம்பியுள்ளனர்.

நவிப்பிள்ளையின் பயணத்தின் நோக்கம் அது அல்ல என்று அரச அதிகாரிகளுக்கு நன்கு தெரியும். ஆனால் விரும்பியோ விரும்பாமலோ தத்தமது நியாயப்பாடுகளை தெளிவுபடுத்த வேண்டியது அதிகாரிகளது கடமையாக்கப்பட்டிருந்தது. அபிவிருத்தி குறித்த முன்னேற்ற அறிக்கை மூலமாவது சில சம்பவங்களை மூடி மறைக்கவோ அல்லது திசை திருப்பி விடவோ முடியும் என்பதே அரசின் நோக்கம். இதற்காகவே அரச அதிபர்கள் அபிவிருத்தியைப்பட்டியலிட பணிக்கப்பட்டனர்.

எது எப்படியோ நவிப்பிள்ளை உண்மை நிலையை தெளிவாக அவதானிப்பது போலவே அவரது அனைத்து செயற்பாடுகளும் இருந்தது என்பதை அவதானிக்கமுடிந்தது. அவரது அவதானிப்புக்களும் நடவடிக்கைகளும் அடுத்த ஐ.நா. மனிதஉரிமைகள் கூட்டத்தில் தெரியவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிராபத்துக்கு வழிவகுத்த இரக்கம்

**உண்மைச்சம்பவம்**

கலிபோர்ணியா மாநிலத்தின் கன்சாஸ் நகரிலிருந்து சுமார் 120 கி.மீ தொலைவில் உள்ள கலீமா கிராமத்தின் நீண்டசாலையில் காரொன்று வேகமாகப் பயணித்துக் கொண்டிருந்தது. சாலையின் இரு மருங்கிலும் உயர்ந்து வளர்ந்த சவுக்கு மரங்கள் காணப்பட்டன. காருக்குள் இளம் தம்பதியரான ஜேக்கப், யூலியட் இருவரும் இருந்தனர்.

நேரம் நள்ளிரவை அண்மித்துக்கொண்டிருந்தது. பதினெட்டே வயதான அதுவும் கர்ப்பவதியான யூலியட் அசதிகாரணமாக காரைச் செலுத்திவரும் கணவன் ஜேக்கப்பின் தோளில் சாய்ந்தபடி கார் செல்லும் பாதையை காரின் விளக்குகளின் வெளிச்சத்தில் நோக்கியபடி இருந்தாள். ஜேக்கப் நிதானமாகக் காரைச் செலுத்தியபடி, மறுநாட் காலையில் தான் பங்குபற்றவேண்டிய வர்த்தகம் தொடர்பான கூட்டம் குறித்த சிந்தனையுடன் இருந்தான்.

இருந்தாற் போலிருந்து, காரின் முன்விளக்குகளின் பிரகாசமான ஒளி வெள்ளத்தில் வீதியின் ஓரத்தில் நின்றபடி ஒரு நபர் காரை நிறுத்தும் படி சைகை காட்டுவதை ஜேக்கப் அவதானித்தான். அப்போது நேரம் இரவு இரண்டு மணி. ஜேக்கப் காரை நிறுத்தினான். காரை நிறுத்தியவன் ஜேக்கப்பிடம் 'லிப்ற்' தரவேண்டுமெனக் கெஞ்சும் பாவனையில் கேட்டான். ஜேக்கப் ஒரு கணம் யோசித்துவிட்டு இரக்கம் மேலிடவே காரில் ஏறிக்கொள்ளும் படி அந்த நபரிடம் கூறினான்.

அப்புதியவனும் காரின் பின் கதவைத் திறந்து கொண்டு ஏறி உள்ளே பின் இருக்கையில் அமர்ந்துகொண்டு கதவைச் சாத்திக் கொண்டான். பின் இருக்கையில் அமர்ந்த அவன் எதுவுமே பேசவில்லை. கார் பல மைல்களைக் கடந்து சென்று கொண்டிருந்தது. காரினுள் ஏறியவன் வெகு தூரம் நடந்த களைப்பினால் சோர்வடைந்துள்ளதாக ஜேக்கப்பின் மனதில் சிந்தனை இழையோடியது. காரின் பின்னால் ஏறி அமர்ந்திருப்பவன் வேறு யாருமல்ல. ஜேம்ஸ் என்ற ஆயுள் தண்டனையைக் கைதி என்பதை இளம் தம்பதியினர் அப்போது அறிந்திருக்கவில்லை. அவன் அப்போது சிறையிலிருந்து தப்பி ஓடி வந்து கொண்டிருக்கிறான்.

ஜேக்கப்பின் கார் 'பொன்டியாக்' கார் சுமார் இரண்டு மணிநேரம் தொடர்ந்து ஓடியது. அந்நேரத்தில் காரின் இயந்திரத்தில் ஏதோ கோளாறு ஏற்படுவதை அவதானித்த ஜேக்கப் காரை வீதி ஓரமாக நிறுத்திவிட்டு, காரைவிட்டிறங்கி பொனட்டைத் திறந்து உயர்த்தினான். குனிந்து இயந்திரத்தைப் பரிசோதிப்பதில் ஈடுபட்டான்.

காரினுள் தூக்கக் கலக்கத்துடன் அமர்ந்திருந்த யூலியட்டின் பின்புறமாக தோள்பகுதியில் ஏதோ ஒன்று அழுத்துவது போலத் தோன்றவே அவள் மெதுவாகத் திரும்பிப் பார்த்தாள். பின்னால் உட்கார்ந்திருந்தவனின் கையில் துப்பாக்கியைக் கண்டதும் அவள் நடுநடுங்கிப் போனாள்.

யூலியட் கர்ப்பம் தரித்து மூன்று மாதங்களே ஆகியிருந்தது. காரினுள் நடப்பது எதுவுமே தெரியாத நிலையில் ஜேக்கப் காரின் பொனட்டைச் சரிசெய்து மூடிவிட்டுத் திரும்பி வந்து காரில் ஏறி உட்கார்ந்து காரை ஸ்ராட் செய்தான். அதேசமயம் பின்னாலிருந்த ஜேம்ஸ் துப்பாக்கியால் ஜேக்கப்பின் தலையில் அடித்தான். இருவரையும் காரில் இருந்து இறங்கச் சொன்னான்.

காரிலிருந்து இறங்கிய தம்பதியர் இருவரையும் கைகளைத் தலைக்குமேல் உயர்த்தும் படி ஜேம்ஸ் கட்டளையிட்டான். பீதியில் உறைந்தபடி நின்றார்கள் ஜேக்கப்பும் யூலிட்டும். ஜேம்ஸ் தங்கள் இருவரையும் நிச்சமாகச் சுட்டுக் கொல்லப்போகிறான் என்றே நம்பினார்கள். யூலியட் கண்ணீர் பெருகிய வண்ணம் ஜேம்ஸைப் பார்த்து "காரை வேண்டுமானால் எடுத்துப் போ, எங்களை மட்டும் ஒன்றும் செய்யாமல் விட்டுவிடு" என்று கெஞ்சினாள்.

ஜேக்கப்பின் தலைக்காயத்திலிருந்து இரத்தம் வழிந்தபடி இருந்தது. மீண்டும் ஒரு முறை ஜேக்கப்பின் தலையில் ஓங்கி அடித்தான் ஜேம்ஸ், தரையில் சாய்ந்த அவனை ஜேம்ஸ் காலால் நெட்டித் தள்ளினான்.

காரின் டிக்கியைத் திறந்துவிட்டு இருவரையும் அந்த டிக்குக்குள் ஏறும்படி கர்ஜித்தான் ஜேம்ஸ். அவ்வேளையில் யூலியட் தான் கர்ப்பவதி எனக் கெஞ்சியதால் அவளைத் தூக்கி காரின் பின் இருக்கையில் போட்டான். ஜேக்கப்பை டிக்கிக்குள் வைத்து மூடினான். ஜேம்ஸ் காரில் ஏறி ஸ்ராட் செய்த போது யூலியட் தனது கணவன் டிக்கிக்குள் இறந்து விடுவார் தயவு செய்து காரை நிறுத்தும்படி கத்தினாள். செவிடன் காதில் சங்கு ஊதியது மாதிரி, அவளது கூக்குரல் காதில் விளாதது போல் காரை விட்டிறங்கி யூலியட்டின் கைகளையும் பின்புறம் கட்டி அவளையும் ஜேக்கப்புடன் டிக்கியில் போட்டு மூடிவிட்டுக் காரைச் செலுத்தினான் ஜேம்ஸ்.

ஒரு மணி நேரம், கார் பயணத்தை மேற் கொண்டதும், ஜேம்ஸ் இடையில் காரை நிறுத்திவிட்டு டிக்கியைத் திறந்து பார்த்துவிட்டு ஜேக்கப்பின் தலையில் துப்பாக்கியை வைத்துச் சுடுவதற்காக துப்பாக்கியின் குதிரையை அழுத்தினான். ஏதேதோ காரணத்தால் துப்பாக்கி சரிவர இயங்கவில்லை. ஏதோ நினைத்தபடி சுடாது மீண்டும் காரில் ஏறிச் செலுத்தத் தொடங்கினான்.

அதேவேளை, காரின் டிக்கிக்குள் கட்டிப் போடப்பட்டிருந்த ஜேக்கப் பெரிதும் முயற்சி செய்து கைக்கட்டுக்களை அவிழ்த்துக் கொண்டான். அத்தோடு மனைவி யூலியட்டின் கைக்கட்டையும் அவிழ்த்துவிட்டான். காரின் டிக்கியிலிருந்த ஜாக்கைப் பயன்படுத்தி டிக்கியின் கதவைச் சிறிது தூக்கி விட்டதால், காற்று உள்ளே வந்தாலும் அதனால் பெரிய அளவில் நன்மை ஏதும் கிட்டவில்லை. இருவருக்கும் மூச்சு விடுவதற்கே கஸ்ரமாயிருந்தது.

"ஜேக்கப்" மெல்லிய குரலில் அழைத்தாள். யூலியட் டிக்கியில் ஏதோ ஒரு மூலையில் "ஸ்பானர்"

முதலிய பழுது பார்க்கும் ஆயுதங்களடங்கிய பெட்டியிருக்கிறது. அதைத்தேடிப்பார்த்து எடுத்தால் ஒவ்வோர் ஆயுதமாக வெளியில் போட்டுக் கொண்டே போகலாம். "சாலையில் விழுந்து கிடக்கும் அவற்றைப் பார்த்து யாராவது நமது காரைப் பின் தொடர்ந்து வரலாம். அதன் மூலம் நமக்கு உதவி கிட்டக் கூடும்" என்றாள் மெதுவாக.

ஜேக்கப் ஒருவாறு சிரமப்பட்டுத் தேடி ஆயுதங்களடங்கிய பெட் டியைக் கண்டுபிடித்தான். யூலியட் சொன்ன மாதிரியே ஓடிக் கொண்டிருக்கும் காரின் டிக்கியிலிருந்து ஒவ்வோர் ஆயுதமாகச் சாலையில் போடத் தொடங்கினான். ஆயுதங்கள் வெளியில் விழும் போது ஏற்படும் சப்தம் அவ்வளவு பெரிதாகக் கேட்கவில்லை என்று தெரிந்ததும் திருப்தியடைந்தான்.

கார் போகும் விதத்தையும், காலையில் எதிர்ப்படும் கார்கள், பேரூந்துகளிலிருந்த எழும் சப்தத்தையும் கொண்டு அப்போது ஏதோ ஒரு நகரத்தினுள் தமது கார் சென்று கொண்டிருப்பதை ஜேக்கப் உணர்ந்து கொண்டான். காயத்தின் காரணமாக இரத்தக் கறைபடிந்த தன் கையை டிக்கியின் இடைவெளியூடாக, வெளியே நீட்டி அங்குமிங்குமாக அசைத்து சாலையில் போவோரின் கவனத்தை ஈர்க்கவும் ஜேக்கப் தவறவில்லை.

அவர்களது கார் கன்சாஸ் நகருக்குள் சென்று கொண்டிருக்கிறது என்பது அப்போது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. நகரப் போக்குவரத்தைக் கண்காணிக்கும் காவல்துறை அதிகாரி டேவிட் அப்போது தெருமுனையில் தனது மோட்டார் சைக்கிளுடன் நின்றிருந்தார். அந்நேரம் பெரிய சாலையிலிருந்து வந்த ஒருவன் பச்சை நிறப் 'பொன்டியாக்' காரின் டிக்கியில் இருந்து இர தம் தோய்ந்த கையொன்று சைகை செய்ததைத் தான் பார்த்ததாக காவல்துறை அதிகாரி டேவிட்டிடம் கூறினான்.

டேவிட் சற்றும் தாமதிக்காது தனது மோட்டார் சைக்கிளில் பச்சை நிற 'பொன்டியாக்' காரைத் தேடிப் புறப்பட்டார். அவளது மோட்டார் சைக்கிளிலில் இருந்த சைரன் ஒலி தொடர்ந்து ஒலித்தது. சாலையில் சிவப்பு விளக்குகள் எரியத் தொடங்கின. மின்னல் வேகத்தில் இயங்கிய டேவிட்டின் கண்பார்வையில் வாஷிங்ரன் சாலையில் ஓரமாக நிறுத்தப்பட்டிருந்த பச்சை நிற 'பொன்டியாக்' கார் விழுந்தது.

மோட்டார் சைக்கிளை நிறுத்தி அது நிற்பதற்குள் கையில் துப்பாக்கியுடன் அக்காரை நெருங்கினார். காரின் முன்னால் அமர்ந்திருந்தவனை நோக்கித் துப்பாக்கியை நீட்டியபடி முன்னால் வந்தார். அதேசமயம் ஜேம்ஸ் தனது துப்பாக்கியை எடுக்கக் கையை நீட்டினான்.

"துப்பாக்கியை எடுக்காதே, சிறிது அசைந்தாலு சுட்டுப் பொசுக்கி விடுவேன்" என்று எச்சரித்தார் டேவிட். அதேகாரின் டிக்கியிலிருந்து ஒரு ஈனக்குரல் கேட்டது. அப்பெண்ணின் குரல் "அவனைச் சுட்டு விடுங்கள் அவனைக் கொன்று விடுங்கள்" என்று கத்துவது டேவிட்டின் காதிலும் வீழ்ந்தது.

டேவிட் றேடியோ செய்தி மூலம் சம்பவம் குறித்து விடுத்த அறிவிப்பைக் கேட்ட காவல்துறையினர் பலர் அந்த இடத்தில் வந்து குவிந்தனர். வேறு வழியின்றி ஜேம்ஸ் சச்சரவு ஏதும் செய்யாமல் காவல் துறையினரிடம் சரணடைந்தான். அவனது கால்சட்டைப் பையில் கார்டிக்கியின் சாவியிருந்தது.

யூலியட்டும், ஜேக்கப்பும் காரின் டிக்கியிலிருந்து விடுவிக்கப்பட்ட போது அவர்களுக்குத் தாகத்தால் நா உலர்ந்திருந்தது. அவர்களாற் பேச முடியவில்லை. ஜேக்கப்பின் தலைக் காயத்தால் மிகவும் சோர்வடைந்திருந்தான். உடனடியாக இருவரும் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். ஏழு மணி நேர உயிர்ப்போராட்டம் முடிவுக்கு வந்தது. ஜேம்ஸ்சுக்கு ஆயுள் தண்டனையுடன் மேலும் இருபத்தியிரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனையும் சேர்த்து விதிக்கப்பட்டது.

***




■ ஜெகன்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## சிறுகதை

பொலிகையூர்.
சு.க.சிந்துதாசன்,

# இலக்கு

"என்னம்மா பயந்திட்டியா...?" மகள் சுடரினி சிரித்துக் கொண்டு தாயின் உடைகளைக் கையில் சுமந்தபடி வீட்டின் வாசலில் நிற்கிறாள். பதினொரு வயது நிரம்பிய "சுடரினி" நாயகியின் மூத்த மகள். சுடரினிக்கு ஒரு தம்பி. இரு பிள் ளைகளின் அன்பிலும் பண்பிலும் சதா நெகிழ்ந்து போகும் நாயகிக்கு அவர்களே ஆறுதலாகவும் இருந் தனர்.

சிறியவள் எனினும் குடும்பப் பொறுப்புணர்ந்தவளாய் சுடரினி காணப்பட்டாள். தாயின் வேலைகளில் பங்கெடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவளுக்கு எப்போதுமே இருக்கும்.

ஒரு கணம் மகளை எண்ணி வியந்த நாயகி

" இல்லை; எப்ப எடுத்தனீ....?" " நீங்கள் எங்கட உடுப்புகளை எடுத்துக் கொண்டிருக்கும் போது தான் நானும் எடுத்தனான்"

மகளின் செயலாள் நெகிழ்ந்து போன நாயகி " சரி சாப்பிடுவம் தம்பி எங்கை...?"

" தெரியவில்லையம்மா?" " தம்பீ...தம்பீ..." என நாலாதிசைகளிலும் கேட்குமாறு மகனை அழைக்கிறாள் தாய். தாயின் குரல் கேட்குமளவுக்கு அவன் கிட்ட இல்லை.

வீட்டுக்கு அருகில் உள்ள குளத்தின் அணைப் பகுதியூடாக குளத்தின் அலைகரைப்பகுதிக்கு வந்திருந்த மகன் தன் நண்பர்களுடன் சேர்ந்து அங்கே காட்டோர அருவியில் விரால் பிடிப்போரை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான்.

ஏக்கம் கலந்தோலித்த தாயின் குரலின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட சுடரினி "அம்மா, நான் தம்பியைத் தேடிப் பார்க்கிறன். நீங்கள் விறகு நனையுது எடுத்து வையுங்கோ" எனக்கூறிவிட்டு தாயின் ... பதிலை எதிர்பார்க்காதவளாய் கமுகஞ் சிலாகைப் படலையைத் திறந்து ஒழுங்கையால் குளக்கரை நோக்கி நடக்கிறாள். ஒழுங்கையின் முடிவுப் பகுதிக்கு வந்த போது குளத்தின் அணைக்கட்டில் சிலர் நடந்து வருவது தெரிகிறது. அவர்கள் தன்னை அண்மிக்கும் வரையில் தெரிகிறது. அவ்விடத்திலேயே ஒரு பாலைக்குற்றியில் அமர்ந்து கொள்கிறாள். அவர்கள் தன்னை அண்மித்த போதுதான் வந்தோரில் தம்பி இல்லையென்பது புரிந்தது. ஒருவித ஏக்கம்... பயம்... இரண்டும் கலந்த ஒரு மன்நிலையில் அடைத்த குரலில் "அண்ணை தம்பியைக் கண்டனீங்களோ...?" "அவன் விரால் பிடிக்கும் அந்த ஐயாவோடை நிற்கிறன்" "ஏன்?" காரணம் புரியாதவளாய் கேட்ட சுடரினிக்கு "தெரியல்லை" அவரின் பதில் பிரமிப்பளித்தது. "சரி!" இதை அம்மாவிட்டைச் சொன்னா தம்பிக்கு அடிவிழும். நானே போய்க் கூட்டி வருவம் என நினைத்தவள் உடனேயே செயலில் இறங்கினாள். மின்னல் வேகத்தில் அந்த இடத்துக்கு வந்த சுடரினிக்கு தம்பியின் செயல் விழிகலங்கச் செய்தது. அந்த ஐயாவுக்கு உதவி செய்து கொடுத்துவிட்டு அவர் கொடுத்த இரு பெரிய விரால்களுடன் வீடு வரப் புறப்படுகிறான். சுடரினியைக் கண்டதும் "அக்கா ஏன் என்னைத் தேடி வந்தனீ...?" நேற்று அம்மா மீன் வாங்க காசுஇல்லையெண்டு சொன்னவா. அம்மா பாவம் அது தான் நான் இப்படிச் செய்தனான். வா! போய் அம்மாவிட்டை குடுப்பம். இரவுக்கு நல்ல மீன்குழம்பு"

சரியெனத் தலையசைத்தவாறு ஏதும் பேசாமல் தம்பியைப் பின்தொடர்ந்து நடக்கிறாள். ஒருபொறுப்புள்ள குடும்பத் தலைவனின் தோரணை அந்தச் சிறுவனில். ஒரு கணம் பளிச்சிட்டு மறைந்தது. சற்று நேரத்துக்கெல்லாம் இருவரும் வீட்டை வந்தடைந்த போது இருவரையும் ஏற இறங்கப் பார்க்கிறாள் நாயகி. மகன் மீது திரும்பிய அவளது பார்வை சிறிது நேரத்துக்கு விலகவேயில்லை. அவள் தன்னை மறந்து ஏதோ சிந்தனையில் திளைந்திருந்தாள். " நாயகி! நாயகி! இந்தா உனக்குப் புடிச்ச விரால்மீன். உடனை கறிவை. நான் போக வேணும். நிறைய வேலை இருக்கு"

" உங்களுக்கு எப்ப ஓய்வு?" எப்பவும் வேலை தானே. வாறதும் அவசரம் தான். போறதும் அவசரம் தான்" " இல்லை நாயகி. எனதுபணி அப்பிடி. நான் என்ன செய்ய முடியும்?" " பக்கத்து வீட்டு அறிவரசன் அண்ணையும் ஒவ்வொரு நாளும் வீட்டுக்கு வந்து போறார் தானே. நீங்க மட்டும் தான் கடமை, பொறுப்பு ஓடுறியள். அப்படி வீட்டை வந்தாலும் உங்கடை வேலையிலை தானே கண்ணாய் இருக்கிறியள்" " நாயகி எல்லாம் நாங்கள் சந்தோசமாய் வாழனும் எண்டு தானே விரைவில் வந்து நான் உன்னோடையே நிற்கிறன். போதுமா...?" " உந்தக் கதையைக் கேட்டுக் கேட்டுப் புளிச்சுப் போச்சு. உதை தண்ணியிலை எழுதுங்கோ" " இல்லை நாயகி. எனது அடுத்த வேலை மிகவும் முக்கியமானது. அது முடிஞ்சா எனக்கு ஓய்வு தான் யோசிக்காதை" "யோசிக்காம எப்பிடி இருக்கிறது...? எனக்கு உங்களை நினைக்கத் தான் பயமா இருக்கு"

"இல்லை நாயகி. என்னைப் போல எத்தினை குடும்பகாரர் கடினமான பணியிலை நிற்கினம்"

" சரி நீங்க சொன்னா அதுசரியாத்தான் இருக்கும்"

" பசிக்குது நாயகி. கறி வைச்சிட்டியா...?" " முடியுது கொஞ்சம் பொறுங்கோ. சாப்பிட முன்னம் பிள்ளையளை ஏத்திக் கொண்டு வாங்கோவன். பள்ளிக்கூடம் இப்ப முடிஞ்சிருக்கும்" சரியெனத் தலையசைத்தபடி உந்துருளியை எடுக்கிறார் அன்பழகன். அவர் உந்துருளி குளக்கட்டில் ஏறிமறையும் வரை பார்த்துக் கொண்டு நின்ற நாயகி விரைவாகச் சமையல் வேலைகளை முடித்து விட்டு கணவரின் பயணத்துக்குத் தேவையான பொருட்களை எடுத்து அடுக்குவதில் ஆர்வம் காட்டியிருந்தாள்.

சிறிது நேரத்தில் பிள்ளைகளை ஏற்றிக் கொண்டு இங்குவந்து சேர்ந்தார் அன்பழகன். நால்வரும் சேர்ந்து உணவு உண்கிறார்கள். அன்பழகன் புறப்படத் தயாராவதற்கு முன்பே அவசர அழைப்பு வருகிறது. நாயகியிடமிருந்து பிள்ளைகளிடமிருந்தும் விடை பெறுகிறார். மூன்றாம் நாள் அன்பழகனின் நண்பர்கள் நாயகி வீட்டுக்கு வருகிறார்கள். அவர்கள் சொன்ன சேதி நாயகியின் தலையில் இடியை இறக்கியது. மறுநாள் வீட்டுக்கு வந்தது அன்பழகனின் மாலை அணிவித்த படம் மட்டும்தான்.

அன்றிலிருந்து அன்பழகனின் கொடுப்பனவுத் தொகையில் தன் குடும்பத்தை நடாத்தி வந்தவளுக்கு காலமாற்றத்தால் கிடைத்த வாழ்வாதாரமற்ற அவல நிலை மற்றொரு அடியையும் இறக்கயிருந்தது. விராலும் கையுமாய் நின்ற மகனை வாரியணைத்து விம்மியழுத நாயகியை தன் பிஞ்சு விரல்களால் வருடிய சுடரினி "நான் படிச்சு உங்களைப் பார்ப்பன் அம்மா!" ஆறுதல் கூறுகிறாள். "எப்படி பிள்ளைகளைப் படிப்பிக்கிறது...? சாப்பாட்டுக்கு என்ன செய்யுறது...?" நிவாரணம் எவ்வளவு காலம் கிடைக்கும்? யார் எனக்கு உதவுவார்கள்...? உதவினாலும் அது எத்தினை நாளைக்கு ...?" பல வினாக்கள் அம்புகளாய் ... பாய்ந்து நாயகியின் தலையைத் துளைக்கின்றன. "எது எப்படியிருப்பினும் பிள்ளைகளைப் படிப்பிக்க வேணும். அதுக்காக நான் நல்லாய் உழைக்க வேணும்" இதைத் தனக்குள் உறுதியெடுத்த நாயகி, மகன் கொண்டு வந்த விரால்மீனைக் கறி சமைக்கத் தயாராகிறாள். மீன் சட்டி கொதித்துக் கொண்டிருக்கிறது "அம்மா பசிக்குது" மகன் கேட்கிறான். தாயின் செவியில்

"நாயகி பசிக்குது" எனக் கேட்டது போலிருந்தது. கணவன் நினைவு மேலிட அவன் புகைப்படத்தை பார்ப் பதற்காக குறித்த படம் வைத்திருந்த சிறுவர் சஞ்சிகையை எடுத்து விரிக்கின்றாள். புகைப்படம் இருந்த பக்கத்தில் தடித்த எழுத்தில் காணப்பட்ட வரிகளில் நாயகி யின் பார்வை ஓடுகிறது. அது மகாபார தத்தில் துரோணரின் விற்பயிற்சிப் பகுதி. "கிளியின் தலைமட்டும் தெரிகிறது" இந்த வரி மட்டும் நாயகியின் விழிகளுக்குத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போனவர்களின் வருகை


ஓவியம்: ரதீஸ்

தொடர் கதை

07

● தொல்புரம் சி. கதிர்காமநாதன்

இன்றும் வெயில் கொடுமை மிக அதிகமாக இருந்தது. மழை பெய்வதற்கான அறிகுறியைக் காணோம் - இலுப்பை பூத்திருக்க வௌவால்கள் உளவு பார்த்துச் சென்றன. எனது அயலிலுள்ள இராமனின் வீட்டிலிருந்து பாட்டுக் கேட்டது. மெல்லியதாகக் காற்று வீசியது.

சாய்மனைக் கட்டிலில் படுத்திருந்த மனுசியின் குறட்டைச் சத்தம் காதில் விழுந்தது. நித்திரையாகி விட்டாள்.

கதைப்பதற்கு என்ன இருக்கிறது?

தினமும் கதைத்துக் கதைத்துக் அவளும் ஓய்ந்து விட்டாள். காலையும் மாலையும் கோயிலுக்குப் போவதில் அவள் தவறுவதில்லை. வீட்டிலோ கோழிவளர்ப்பு, ஆட்டடி கூட்டல் சமையல் எனப் பொழுது போகத்தான் செய்கிறது. இடையில் எங்கேயாவது சும்மா கதைக்கப் போவது குறைவு தான். எனக்கும் வீட்டு வேலைகள், வெளி அலுவல்கள், ஆட்டைப் பார்ப்பது என வேலைகள் இருந்தாலும் பொழுது போவது கஷ்டமாகத்தான் உள்ளது.

வாசிகசாலை போனால் ஏதாவது படித்தாவது பொழுது போகும். மனுசியை மெல்ல எழுப்பிச் சொல்லிவிட்டுப் கிளம்பினேன். அங்கேயும் 'படிப்பு' வேறுவிதமாக இருந்தது.

'கணேசனின் மகள் வெளிநாடு போக வெளிக்கிட்டு இடையில் நிற்பது'

'மார்க்கண்டு புண்ணியத்தின் மகன் ஜேர்மன் போக கொழும்பு போய் நிற்பது.'

'கார்க்கார கந்தையாவின்ரை பெட்டை பக்கத்து வீட்டுப் பெடியனோட ஓடிப் போனது.'

'ரத்தினத்தின் மூத்தமகள், புருஷன் விட்டிட்டுப் போன பிறகு 'யோசித்ததில்' தெல்லிப்பளையில் கொண்டு போய் விட்டது.'

இப்படியான கதைகளுக்கும், செய்திகளுக்கும் பஞ்சமில்லை. கதைப்பதில் தான் எங்கள் பொழுது அதிகம் போகின்றது. பக்கத்து வீட்டு ராமனின் மகன் சைக்கிளில் விரைந்து வந்து நின்றான.

''மாமா உங்களைத் தேடி ஆக்கள் வந்து நிக்கினமாம் மாமி கெதியாய் வரட்டாம்''

'யாராக இருக்கும்?'

சைக்கிளைக் கெதியாய் உழக்கினேன். வீட்டை நெருங்கிய போது வாசலில் 'கைஸ்' வான் நின்று கொண்டிருந்தது.

மனம் அந்தரப்பட்டது. அயலாட்கள் வாசலுக்கு வந்து வேடிக்கை பார்ப்பது தெரிந்தது. சைக்கிளை நிறுத்தி உள்ளே போனேன்.

எனக்குத் தெரிந்திராத முகங்கள். கணவன், மனைவி, இரண்டு குழந்தைகள். எல்லாரும் 'புஷ்டியாக' நிறமாக இருந்தார்கள். மேசையில் ரீகப், பிஸ்கெட்

''என்ன யோசிக்கிறியள், எங்கட மகனோட ஒண்டாய் வேலை செய்யிறவை. யாழ்ப்பாணம் போகேக்க எங்கட வீட்டை போகச் சொன்னவனாம். அதான் எங்களைப் பார்க்க வந்திருக்கினம்.''

கொஞ்ச நேரம் தான் அவதிப்பட்டேன். எப்படிக் கதையைத் தொடங்குவது? அமைதியடையத் தொடங்கினேன். வழமையான விசாரிப்புக்கள், 'எப்ப இங்கு வந்தது? எப்ப திரும்பிப் போறியள்? எந்த ஊர்?' எனக்கதை நகர்ந்தது.

மனுசி இரண்டு பிள்ளைகளையும் இழுத்துக் கதைக்க முற்பட்டாள். அவர்கள் 'அடையாள அட்டை' இல்லாமல் ஆமிக்காரனிடம் மாட்டிக் கொண்ட தமிழ் மகன் போல்' 'மிரண்டு போய் நின்றார்கள்.

"பிள்ளையளுக்கு என்ன பேர்?"

"என்ன படிக்கிறியள்?"

"எங்கட ஊர் உங்களுக்குப் பிடிச்சிருக்கோ?"

மனுசி கேட்ட கேள்விகளுக்கு அவர்கள் பதில் சொல்லாமல் மௌனமாக விறைத்த படி நின்றார்கள்.

கணவனும் மனைவியும் சிரித்தார்கள். "அவையளுக்கு தமிழ் சரியாத் தெரியாது, சும்மா எழுதுவினம் கதைக்க மாட்டினம். நோர்வேப் பாசை தெரியும்." மனுசி பேசாமல் என்னைப் பார்த்தாள். இரு பிள்ளைகளையும் அன்பாக ஆதரவாகக் கதைத்துக் கொஞ்சிக் குலாவ முடியாதது மனுசியின் முகத்தில் தெரிந்தது - எனக்கும் இது கஸ்ரமாகத்தான் இருந்தது.

(அடுத்தவாரம் தொடரும்)

# இராசி பலன்



04.09.2013 - 10.09.2013



### அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

**தன் தகுதிக்கேற்ற செயல்களைச் செய்து வெற்றிக்கனி பறிக்கும், மேஷ ராசிக்காரர்களே!**

பணவரவை குடும்பத்தின் அத்தியாவசிய செலவுகளுக்குச் சிக்கனமாக பயன்படுத்துவீர்கள். புத்திரரின் உடல் நலம் ஆரோக்கியம் பெற மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். எதிர்வரும் சிரம சூழ்நிலைகளை பொறுமை, சமயோசித செயலால் சரி செய்வது நல்லது. இல்லறத்துணையின் கருத்துக்களை மதித்து செயல்படுவீர்கள். தொழிலில் அளவான உற்பத்தி, பணவரவு இருக்கும். முக்கிய செலவுகளை ஈடுகட்ட பணவசதி கிடைக்கும்.



### கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருக்சீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

**பிறருக்கு உதவிபுரிந்து வாழ்வில் நன்மை பெறும், ரிஷப ராசிக்காரர்களே!**

உங்கள் செயலில் வசீகரம் அதிகரிக்கும். புதியவர்களின் நட்பு கிடைத்து நன்மதிப்பு முக்கிய உதவியை பெற்றுத்தரும். வீடு வாகனத்தில் பயன்பாட்டு வசதி திருப்திகர அளவில் இருக்கும். பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள். இல்லறத்துணையின் கூடுதல் அன்பு, பாசம் மனம் நெகிழ வைக்கும். உத்தியோகஸ்தர் அதிக பொறுப்புணர்வுடன் செயல்பட்டு நன்மதிப்பு பெறுவர்.



### மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**மாறுபட்ட கருத்துக்களை துணிவுடன் தவிர்த்திடும், மிதுன ராசிக்காரர்களே!**

எதிர் மனபாங்குடன் உங்களிடம் பேசுபவரிடம் இருந்து விலகுவதால் திட்டமிட்ட பணிகளை குறித்த காலத்தில் நிறைவேற்ற இயலும். அதிக விலையுள்ள பொருட்களை பயன்படுத்துவதிலும், பாதுகாப்பதிலும் கூடுதல் அக்கறை கொள்வது நல்லது. புதிய முயற்சியால் சமூகத்திலும், தொழில் வகையிலும் திட்டமிட்ட முன்னேற்ற இலக்கை அடைவீர்கள். எதிரி சொந்த சிரமங்களால் இடம் மாறுகிற நன்னிலை உண்டு.



### புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

**நல்ஒழுக்கத்தை விருப்ப முடன் பின்பற்றி வாழும், கடக ராசிக்காரர்களே!**

பணி நிறைவேற, கூடுதல் கால அவகாசம் தேவைப்படும். வீடு, வாகனத்தில் பராமரிப்பு பணி தேவைப்படலாம். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு வகைகளை உண்ணக்கூடாது. இல்லறத்துணை, குடும்ப பொறுப்பை சிறப்பாக மேற்கொள்வார். தேவையற்ற விஷயங்களை பேசுவது கூடாது. குடும்ப பெண்கள், தங்க நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம். பணியாளர்கள், பணியிடத்தில் உள்ள சூழ்நிலைகளை உணர்ந்து செயல்படுவது, நற்பலன்.



### மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

**இன்ப வாழ்வின் திசை நோக்கி நடைபோடும், சிம்ம ராசிக்காரர்களே!**

மனம், செயலில் புத்துணர்வு ஏற்படும். கடந்த நாள்களில் நிறைவேற, தாமதமான பணிகளை உத்வேக செயலால் பூர்த்தி செய்வீர்கள். தன்னைச் சார்ந்தவர்களுக்கு வேற்றுமை பாராமல், இயன்ற அளவில் உதவுவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க சிலருக்கு அனுகூலம் உண்டு. புதிய பணிகளில் ஆர்வம் கொள்வீர்கள். இல்லறத்துணை குடும்ப நலன் கவனத்தில் கொண்டு நடந்து கொள்வார்.



### உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்

**வாழ்வில் சிரமங்களை துணிச்சலுடன் சரி செய்திடும், கன்னி ராசிக்காரர்களே!**

சிறு பணியும் நேர்த்தியாக அமைந்து புகழையும், தாராள பணவரவையும் பெற்றுத் தரும். அன்புக்கு உரியவர்களிடம், பொது விடயம் பேசுவதில், நிதான குணம் பின்பற்ற வேண்டும். ஆடம்பர செலவுகளால், சேமிப்பு பணம் கொஞ்சம் குறைந்திடும். வீடு, வாகனத்தில் நம்பகத் தன்மை குறைவானவர்களுக்கு இடம்கொடுக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குளறுபடியை அனுபவசாலியின் ஆலோசனை கேட்டு சரி செய்வீர்கள்.



### சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**தன்னிடம் பழகுபவர்களை சமமாக நடத்தும், துலாம் ராசிக்காரர்களே!**

நியாய, தர்ம செயல்களால் உறவினர், நண்பர்களின் பார்வையை உங்கள் பக்கம் கொண்டு வருவீர்கள். கூடுதல் பணவரவு கிடைக்க வரும், புதிய வாய்ப்புகளை பயன்படுத்துவீர்கள். வீடு, வாகனத்தில் பராமரிப்பு பணி தேவைப்படும். புத்திரரின் சேர்க்கை சகவாசம் அறிந்து, சில ஆலோசனை சொல்வீர்கள். எதிர்மனப்பாங்குடன் உங்களுக்கு இடையூறு செய்தவர் தன் தவறை உணர்ந்து, சமரசமாக நடந்து கொள்வர்.



### விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

**பிறர் கேட்கும் உதவியை இயன்ற அளவில் வழங்கும், விருச்சிக ராசிக்காரர்களே!**

வாழ்வில் கிடைத்த நன்மைகளின் பலன்களை பயன்படுத்த தயங்குவீர்கள். எவருக்கும் உதவி வழங்குவதில், தகுதிக்கு மீறிய அளவிலான வாக்குறுதி தர வேண்டாம். இளைய சகோதரர் உறுதுணையாக நடந்து கொள்வார். வாகனத்தில் மித வேகம் பின்பற்றுவதால், பயணமுறை எளிதாகும். குடும்ப செலவை சரிக்கட்ட கொஞ்சம் பணக்கடன் பெறுவீர்கள். இல்லறத்துணை, உங்களின் நல்ல குணத்தை மதித்து, தியாக உணர்வுடன் குடும்ப நலன் பேணுவார்.



### மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

**சொல்லைவிட, செயலுக்கு முக்கியத்துவம் தரும், தனுசு ராசிக் காரர்களே!**

வாழ்வில் எதிர்வருகிற நிகழ்வுகள், சந்தோஷமாக அமைந்து மனதிற்கு உற்சாகம் தரும். வெகுநாள் திட்டமிட்ட பணியை நிறைவேற்றி, கூடுதல் நன்மை பெறுவீர்கள். பூர்வ சொத்தில், சீரான அளவில் வருமானம் கிடைக்கும். உணவு நடைமுறை பழக்க வழக்கங்களில், அதிக மாற்றம் செய்யாமல் இருப்பது நல்லது. இல்லறத் துணையில் நம்பிக்கையை பாதுகாக்கும் வகையில், ஒவ்வொரு செயலிலும் நடந்து கொள்ள வேண்டும்.



### உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்

**இறை பக்தியில் தன்னை ஆர்வமுடன் ஈடுபடுத்தும், மகர ராசிக்காரர்களே!**

கெடுமதி உள்ள சிலர், உங்கள் நலனில் அக்கறை கொண்டவர்போல் பேசி, மறை முகமாக சிரமம் உருவாக்குவர். அவர்களிடம் சமயோசிதமாக விலகுவது நல்லது. வாகனத்தில் பராமரிப்பு பணி மேற்கொள்வதால் பயணமுறை எளிதாகும். புத்திரர், உங்கள் கருத்துக்களை மதித்து நடந்து பெருமை தேடித் தருவார். வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்க அனுகூலம் உண்டு. இல்லறத்துணை ஒற்றுமை குணத்துடன் நடந்து மகிழ்ச்சிகர வாழ்வை உருவாக்குவார்.



### அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்

**பணவரவுக்கு ஏற்ப குடும்ப செலவுகளை மேற்கொள்ளும், கும்ப ராசிக்காரர்களே!**

பணிகளில் உற்சாகமும், நேர்த்தியும் நிறைந்திருக்கும். மனதில் தெய்வீக சிந்தனை வளரும். குடும்பத்தில் முன்பு ஏற்பட்ட பிரச்சினையில் சுமுக தீர்வு காண்பீர்கள். உறவினர்களின் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி வளரும். புத்திரர் சொல்லும் நல்ல கருத்துக்களை, புதிய கோணத்தில் அணுகுவீர்கள். உடல்நல ஆரோக்கியம் பலம் பெறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற புதியவர்களின் உதவி கிடைக்கும். உத்தியோகஸ்தர் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டுப் பெறுவர்.



### பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

**நல்ல செயல்களால் மனதை இலகுவாக வைத்திடும், மீன ராசிக்காரர்களே!**

எதார்த்த குணங்களில் இருந்து மாறாமல் நடந்து கொள்வதால், வாழ்வில் எதிர்பார்த்த நன்மை முழு அளவில் கிடைக்கும். சிறு கஷ்டங்களை பெரிதுபடுத்தாமல், சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்வீர்கள். அக்கம் பக்கத்தவருடன், உங்கள் மீது இருந்த மணக்கிலேசம் விலகி, நல்அன்பு உருவாகும். இல்லறத் துணையின் கருத்துக்கு உரிய மதிப்பு தருவதால், குடும்ப ஒற்றுமை சீராகும். தொழிலின் அளவான மூலதனம், கூடுதல் உழைப்பு என்ற மன உணர்வுடன் பணிபுரிவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலித்துத்தான் கல்யாணம் செய்வேன்

## – ஆர்யா 'கல கல' பேட்டி



'நான் கடவுள்' படத்துக்குப் பிறகு, நான் என்னுடைய சினிமா எதிர் காலம் பற்றி கவனம் செலுத்திருக்க வேண்டும். ஆனால், எல்லாவற்றையுமே ஜொலியாக எடுத்துக்கொண்டு ஜொலியான படங்கள் மட்டும் பண்ணினேன். என்னுடைய பசியைத் தீர்க்கும் இரை மாதிரிக் கிடைத்தது தான் 'இரண்டாம் உலகம்'. இன்னொரு பக்கம் ஜாலியான பாதையில் 'ராஜா ராணி'. அடுத்தது அஜித்துடன் இணைந்து 'ஆரம்பம்' மூன்று படங்களுமே மூன்று விதமானவை. சந்தோஷமாக இருக்கிறேன் - மயக்கும் அதே பார்வையோடும் அழகான சிரிப்போடும் பேசுகிறார் ஆர்யா.,

★ என்னதான் நல்ல நடிகராக இருந்தாலும் கூட நடிக்கும் நடிகைகளை வளைத்துப் போடுவதில் ஆர்யா கில்லாடி என்று பேச்சாக இருக்கிறதே?

அந்த வருத்தம் எனக்கும் இருக்கத்தான் செய்கிறது.

இப்படிப் பெயர் வருவதற்கு நான் நடித்த பாத்திரங்களும் ஒரு காரணம். நான் எதையுமே ஜொலியா எடுத்துக் கொள்வேன். இதையும் ஜொலியாவே எடுத்துக் கொள்கிறேன். என்னுடன் நடிக்கும் எல்லா நடிகைகளுடனும் என்னைச் சேர்த்து வைச்சு எழுதுகிறார்கள். 'உள்ளம் கேட்குமே' பூஜாவில் ஆரம்பித்து இப்போது நயன், அனுஷ்கா வரைக்கும் எழுதிக் கொண்டே இருக்கிறார்கள். நஸ்ரியாவை மட்டும் இன்னும் ஏன் விட்டு வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. சில கிசுகிசுக்களை நானே பரப்புகிறேன் என்றும் சிலர் சொல்கிறார்கள். அவற்றையெல்லாம் படிக்கும்போது சிரிப்பாக இருக்கும். எந்தச் செய்தியும் என் தனிப்பட்ட வாழ்க்கையைப் பாதித்தது இல்லை. என்னைப் பற்றி என் குடும்பத்துக்கு நன்றாகவே தெரியும். அதனால் பிரச்சினை இல்லை.

★ ஊடகங்கள் மீது கடும் கோபத்தில் இருப்பது போல் தெரிகிறதே?,

எனக்கு ஊடகங்கள் தேவை. அதேபோன்று ஊடகங்களுக்கும் நான் தேவை. பல பெரிய நடிகர்கள் இருக்கும் இடத்தில் என் னைப் பற்றியும் நான்கு வார்த்தை எழுதுகிறார்களே என்று சந்தோஷப்பட வேண்டியதுதான்!

★ ஒரு கல்யாணத்தைப் பண்ணி எல்லா வதந்திகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதுதானே?,

கல்யாணமா? ஏன் இந்தக் கொலைவெறி? சல்மான்கானைப் பாருங்கள்... இன்னும் கல்யாணம் செய்யாமல் சந்தோஷமாக இருக்கிறார். நான் சல்மான் கான் மாதிரிதான் இருக்கப்போகிறேன்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விஜய்க்கு ஜோடியாக சமந்தா

'தலைவா' படத்திற்குப் பின்பு நேசன் இயக்கத்தில் 'ஜில்லா' என்ற படத்தில் நடித்து வருகிறார்.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் வெளிவரும் நோக்கத்தில் படப்படிப்பு நடந்து வருகிறது. இந்தப் படங்களுக்குப் பின்னர் ஏ.ஆர். முருகதாசும், விஜய்யும் புதுப்படம் ஒன்றில் இணைகின்றார்கள். இந்தப் படத்திற்கு 'அதிரடி' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளதாக விஜய் ரசிகர்களிடம் செய்தி பரவியது. ஆனால் அதை இயக்குநர் முருகதாஸ் மறுத்துள்ளார். இது ஒரு வதந்தி. படத்திற்கு இன்னும் பெயர் வைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

அதே வேளையில் விஜய்க்கு ஜோடியாக சமந்தா ஒப்பந்தமாகியுள்ளார். அனிருத் இசையமைக்கிறார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இப்படத்திற்கான வேலைகள் டிசம்பர் மாதம் இறுதி அல்லது ஜனவரியில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# ரஜினியின் 'விக்ரமசிம்ஹா'

தெலுங்கில் 'விக்ரமசிம்ஹா' என்ற பெயரில் வெளிவர இருக்கிறதாம் ரஜினியின் கோச்சடையான்.

இது சௌந்தர்யாவின் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் படம்.

இப்படமானது தற்போது கொலிவூட்டில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. இதன் இறுதிகட்ட பணிகள் நடைபெற்றுவருகின்றன.

இந்நிலையில் தெலுங்கிலும் இப்படம் 'விக்ரம சிம்ஹா' என்ற பெயரில் வெளிவர இருக்கிறதாம்.

'கோச்சடையான்' படம் ரஜினி ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆண்டு இறுதியில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



பிரபல ப
'மின்சார
படத்தில்
இடம்பெ
அழைக்க
எந்தவித
இந்த பட
வைரமுத்
எடுத்

# மீண்டும் அசின்

தமிழில் முன்னணி நடிகையாக இருந்தவர் அசின். இவர் நடித்த சன் ஆப் மகாலட்சுமி, கஜினி, போக்கிரி போன்ற படங்கள் வெற்றி பெற்றன. இந்த வெற்றி அவருக்கு சல்மான்கானுடன் ஜோடி சேரும் வாய்ப்பை தேடிக்கொடுத்தது. இதனால் தமிழ் சினிமாவில் நடிப்பதை தவிர்த்து வந்தார். அபிசேக் பச்சான் உடன் ஒரு படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியிருந்தார். அந்த வாய்ப்பை ஸ்ருதிஹாசன் பறித்துக்கொண்டாராம். இதனால் கொலிவூட்டில் பட வாய்ப்பு ஏதும் இல்லாத அசின் பார்வை மீண்டும் கொலிவூட் பக்கம் திரும்பயுள்ளது. லிங்குசாமியின் தயாரிப்பில் கமல் ஒரு படத்தில் நடிக்கிறார். இதில் அசின்தான் கதாநாயகி. இந்தப் படத்தின் மூலம் மீண்டும் கொலிவூட்டில் ஒரு ரவுண்டு வரலாம் எனத் திட்டமிட்டுள்ளாராம் அசின்.







# ஹன்சிகாதான் வேணும்

தனுஷ் தயாரிப்பில் வெளியான 'எதிர்நீச்சல்' படத்தின் மூலம் சிவகார்த்திகேயனை கோடிகளில் புரளும்படி உயரத்தில் சென்று விட்டது.

இதனால் புகழின் உச்சிக்கு சென்ற சிவா இனி முன்னணி கதாநாயகிகளுடன் மட்டும் தான் நடிப்பேன். அதுவும் ஹன்சிகா மாதிரி கொழு கொழுன்னு இருக்கிற கதாநாயகிகளை உடனே ஓ.கே என்று சொல்லிவிடுகிறாராம்.

இது உண்மைதான் என்பது போல இப்போது அவர் நடித்துள்ள வருத்தப்படாத வாலிபர் சங்கம் படத்துக்கு பின்பு மீண்டும் அந்தப்படத்தின் இயக்குனர் பொன்ராமின் அடுத்த படத்திலும் ஹன்சிகா ரேஞ்சில் இருக்கும் கதாநாயகியை வலைவீசி தேடி வருகிறதாம் திருப்பதி பரதர்ஸ் நிறுவனம். மேலும் அவர்களால் தேடப்படும் நடிகை, அட்லிஸ்ட் தென்னிந்திய சினிமாவையாவது கலக்கிக் கொண்டிருப்பவராக இருக்க வேண்டும் என்று நினைக்கிறாராம் சிவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாடகரின் அவதாரம்

# கலக்கவரும் அஞ்சலி

சினிமா

ராகவா லாரன்ஸின் இயக்கத்தில் 'முனி 3' திரைப்படத்தின் மூலம் மீண்டும் ரசிகர்களைக் கவர வருகிறார் நடிகை அஞ்சலி.

முனி, காஞ்சனா படங்களின் வெற்றியைத் தொடர்ந்து தற்போது ராகவா லாரன்ஸ், இதன் மூன்றாம் பாகமான 'கங்கா' படத்தை உருவாக்கி வருகிறார்.

ஒரே நேரத்தில் தமிழ், தெலுங்கு என இரு மொழிகளில் உருவாகி வரும் இப்படத்தில் டாப்சி, கோவை சரளா, தேவதர்ஷினி ஆகியோர் நடித்து வருகின்றனர்.

தற்போது, இதில் சிறப்புப் தோற்றத்தில் நடிகை அஞ்சலி நடிக்கவுள்ளாராம். அஞ்சலி இப்படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டு தெலுங்கில் தனது மார்க்கெட்டை உயர்த்த முடிவு செய்துள்ளாராம்.



பாடகரான ஸ்ரீநிவாஸ் இசையமைப்பாளர் அவதாரம் எடுத்துள்ளார்.
...ர கனவு' படத்தில் இடம்பெற்ற 'மானா மதுர மாமரத்து கிளையே', 'தாஜ்மகால்' ...ல் இடம்பெற்ற 'சொட்ட சொட்ட நனையுது தாஜ்மகால்' 'படையப்பா' படத்தில் ...பெற்ற 'மின்சாரப் பூவே' போன்ற எண்ணற்ற ஹிட் பாடல்களை பாடியவர் ஸ்ரீநி என்று ...க்கப்படும் ஸ்ரீநிவாஸ். இவர் தற்போது எந்தவித பரபரப்பும் இல்லாமல் அதாவது ...த சர்ச்சையும் இல்லாமல் ''கங்காரு'' படத்தை இயக்கி வருகிறார்.
...டத்திற்குத்தான் ஸ்ரீநிவாஸ் இசையமைத்திருக்கிறார். பாடல்கள் முழுவதையும் ...த்து எழுதியிருக்கிறார். இவர் தற்போது இசையமைப்பாளராகவும் அவதாரம் ...றார்.



# தாமதமாகும் படம்

லிங்குசாமி இயக்கத்தில் சூர்யா நடிக்கும் புதிய படத்தின் படப்பிடிப் பானது திடீரென்று தள்ளிவைக்கப்பட் டுள்ளது.

சிங்கம் 2 முடித்த கையோடு புதிய படத்தில் நடிக்க திட்டமிட்டிருந்தார் சூர்யா. அவரிடம் லிங்குசாமி, கவுதம் மேனன் கால்ஷீட் கேட்டிருந்தனர். இருவரிடமும் பேச்சுவார்த்தை நடத்திய சூர்யா இருவரது படங்களிலும் மாறி மாறி நடிக்க முடிவு செய்தார். ஆனால், கவுதம் மேனன் சூர்யாவுக்கு இடையே நடந்த பேச்சுவார்த்தையில் கருத்து வேற்றுமை உருவானது. இதனைத் தொடர்ந்து தொழில்நுட்ப காரணங்களுக்காக இப்படத்தின் படப்படிப்பில் பிறகு பங்கேற்க உள்ளதாக சூர்யா தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து லிங்குசாமி இயக்கத்தில் நடிக்க தயாரானார் சூர்யா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அம்மா,**

எழும்பியிரு.... கண்ணைத் துடைத்துக்கொள்... எல்லாரும் உன்னப் பாக்கினம்... எனக்கு வெக்கமாயிருக்கு அம்மா...

நான் சின்னனா இருக்கேக்கயும் இப்படித்தான்.

ஒரு நாள் நல்லூர் திருவிழாவில் காணாமல் போயிற்றன். அந்த நேரத்தி உன்னை விட பலூன் யாவரியைப் பிடிச்சிருந்ததம்மா. அவனுக்குப் பின்னால போய் உன்ன பிரிஞ்சிற்றன். அந்த நேரமும் நீ இப்பிடித்தான் மண்ணில பிரண்டு கதறினனீ. அப்ப, உன்ர முன்தானையால, உன்ர கண்ணீர நான்தான் துடைச்சுவிட்டேன்.

ஆனால் இப்ப உன்ர கண்ணீரத் துடைக்க நான் வரமாட்டன் அம்மா. ஏனென்டா நான் உண்மையாவே காணாமல் போயிற்றன். அம்மா... னேய் .... எழும்பியிரன....

வீட்டுக்குப் போ....

அப்பா எப்பவும் போல படலையடியில காத்துக்கொண்டிருப்பார்.... அம்மா, எழும்பியிரு.... கண்ணைத் துடைச்சுக் கொள்.... எல்லாரும் உன்னப் பாக்கினம்.....

எனக்கு வெட்கமாய் இருக்கு அம்மா...

னேய் .. எழும்பெண....

*இப்படிக்கு*

**காணாமல் போனவர்கள்.**









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்



தொகுப்பு: ஸ்ருதி

"யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பார் சொல்லிழுக்குப் பட்டு".

இது ஆயிரமாயிரம் ஆண்டுகளிற்கு முன்பு வள்ளுவர் கூறியது. நா இருக்கின்றது என்பதற்காக எவரைப் பற்றியும் எப்படியும் பேசமுடியும் என்று எம்மில் பல சகோதரிகள் நினைக்கிறோம். ஆனால் அது தவறு. இன்றெல்லாம் வீடுகளிலும் சரி அலுவலகங்களிலும் சரி ஏற்படுகின்ற பல்வேறு வகையான பிரச்சினைகளிற்கு இவ்வாறான விடயங்களே காரணமாகின்றன. இத்தகைய பண்பினை மாற்றிக் கொள்ளவும் எம்மில் பலர் தயாராகவில்லை.

ஒருவரைப்பற்றி இன்னொருவரிற்கு புறங்கூறுவதால் என்ன பயன் இருக்கப்போகிறது. வீணான சண்டைகள் தோன்றுவதே மிச்சம். பொதுவாக திருமணமாகி கணவன் மனைவி மற்றும் கணவனின் குடும்பத்தவர் அல்லது மனைவியின் குடும்பத்தினருடன் சேர்ந்து வாழ்கின்ற தம்பதியினரிடம் இந்தப் பண்பு அதிகமாகக் காணப்படுவதைக் காணலாம். இதனால் குடும்ப வாழ்வின் இன்பம் தொலைத்து அமைதியின்மையும் குழப்பங்களும் தோன்றுகின்றது. சமூகத்தில் நல்ல மதிப்புடன் வாழ்கின்றவர்களை உங்களுடைய தேவையற்ற புறங்கூறலானது மிகவும் அதிகளவில் பாதிக்கக்கூடும்.

கட்டாயமாகக் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய விடயங்கள் சில ஒருவரிடம் காணப்படலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் அதனை அவருடைய முகத்திற்கு நேராகக் கூறி அவரை மாற்றலாம். அதனை விடுத்து போகவிட்டு பின்னால் குறைபேசுவது எந்த வகையிலும் பயனுடையதாகாது. அதனால் எமது வாழ்வை எங்களிற்கு மட்டுமன்றி மற்றவர்களிற்கும் பயனுள்ள வகையில் வாழ்வோம். புறங்கூறுவதை விட்டுவிடுவோம்.

# அழகு! அழகு!! அழகு!!!

அழகை ஆராதிப்பதில் எந்த விதமான தவறும் இல்லை. ஆனால் அதற்காக வாழ்க்கை நாள்களில் முழுதையுமே இழப்பதும் நல்லதல்ல. தேவையான அளவிற்கு தேவையான நேரத்தில் தேவையான முறையில் பாவித்தால் அதன் பயன் உரிய முறையில் கிடைக்கும்.

இப்பொழுதெல்லாம் நாளுக்கு நாள் அழகுநிலையங்களின் எண்ணிக்கைகள் பெருகிக்கொண்டே போகின்றன. எங்கள் சகோதரிகளுக்கு அவையின்றி வாழ்வில்லை என்கின்ற அளவிற்கு நிலைமை காணப்படுகின்றது. ஆனால் அதனைவிட இயற்கை நன்மை கொண்ட அழகியல் குறிப்புக்கள் சில இதோ உங்களுக்காக....

★ சருமம் அழகாக இருக்கவேண்டும் என்று நினைப்பவர்கள் கரட்டை நன்றாக அரைத்துத் தேனுடன் கலந்து பூசி பின்னர் அரை நிமிடம் கழித்து கழுவிவர சருமம் பொலிவாகும்.

★ பப்பாளிப் பழத்தை முகத்தில் பூசிவர முகம் மிகவும் பிரகாசமாக மாறுவதுடன் இயற்கையான அழகும் கிடைக்கும்.

★ கண்களைச் சுற்றி கருவளையம் இருக்கின்ற பெண்கள் கற்றாளையின் சோற்றுப் பகுதியைப் பன்னீருடன் சேர்த்து கழுவிவர கருவளையம் நீங்கும்.

★ முகத்தில் அதிகம் எண்ணெய்த்தன்மை காணப்படுகின்றது என்று நினைப்பவர்கள் வெள்ளரிக்காயை முகத்தில் பூசி வர இத்தன்மை குறைவடையும்.

★ கண்களுக்குக் குளிரச்சியைக் கொடுக்கக்கூடிய தன்மை உருளைக்கிழங்கிற்கு இருக் கிறது.

இவற்றையெல்லாம் விட தயிர், கஸ்தூரி மஞ்சள், எலுமிச்சை போன்றனவும் மிகவும் பயனுள்ளவையாகும்.



## புதுயுகத்தைத் தேடி......

மகளிர் பக்கம்

# கைகொடுத்த சோமாலி மாம்



சோமாலி மாம், குழந்தையாக இருக்கும் போதே ஒரு பாலியல் அடிமையாக 1970ஆம் ஆண்டு கம்போடியாவிற்கு விற்கப்பட்டவர். பல ஆண்டுகளாகப் பாலியல் ரீதியாகப் பலாத்காரத்திலும் சித்திரவதையிலும் சிக்கித் துன்புறுத்தப்பட்டவர். இன ரீதியான அடக்குதல்களினாலும் வறுமையின் காரணத்தாலும் இவர் பாலியல் தொழிற்றுறைக்கு விற்கப்பட்டார். தன்னுடைய பாலியல் கட்டாயப்படுதல் வாழ்வில் இருக்கின்ற காலத்தில் தன்னுடைய தோழி ஒருத்தியின் கொலையை நேரில் கண்டிருந்தார். இதனால் அங்கிருந்து தப்பித்துக் கொள்ள விரும்பி, ஒருகட்டத்தில் அங்கிருந்து தப்பித் தன் அனுபவத்தை வெளிப்படுத்தி, தன் போன்று பாதிக்கப்பட்டவர்களுக்காகச் செயற் பட்டுவருகிறார்.

இதற்காக அவர் 1996 இல் AFESIP என்ற அமைப்பினை கம்போடியாவில் அமைத்திருக்கிறார். அவர் களை இத்தகைய துன்பச் சிறையிலிருந்து வெளியேற்றக் கடுமையாகப் போராடி வருகின்றார். இதற்காக உலகளவில் அமைப்புக்களையும் நிறுவி பாலியல் விற்பனையைத் தடுப்பதற்கான செயற்றிட்டங்களில் தீவிரமாகச் செயற்பட்டுவருகிறார். இவருடைய செயற்பாடுகளுக்காகப் பல விருதுகளையும் பெற்றிருக்கிறார்.

- Prince of Asturias Award for International Cooperation
- 2006 Glamour Woman of the Year
- World Children's Prize for the Rights of the Child (WCPRC)
- Roland Berger Human Dignity Award 2009
- One of TIME magazine's 100 Most Influential People in 2009
- Posco TJ Park Foundation Community Development & Philanthropy Prize, 2012
- Nomura CARES Award, 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பல் பரமசிவம்

# எங்கடை உரையை யாரையா கேட்பினம்?



பம்பல் பரமசிவத்திற்கு இத்தகைய அழைப்புக்கள் வருவது மிக, மிக அரிது.

தாங்கள் நடத்தவிருக்கும் முன்பள்ளிச் சிறார்களது விளையாட்டுப் போட்டியில் விருந்தினராகப் பங்குபற்றுவதுடன், குறிப்பிட்ட தினத்தில் நிகழ்வு ஆரம்பமாவதற்கு அரைமணி நேரமேனும் முன்னதாக வருகை தந்து, தொடக்க வைபவத்தில் கலந்து கொள்வதுடன், வெற்றி பெற்ற பிள்ளைகளுக்குத் தங்கள் கரத்தால் பரிசு வழங்கிக் கௌரவிப்பதுடன், உரையும் நிகழ்த்துமாறும், இதற்கு மறுக்காமல் சம்மதிக்குமாறும் பணிவன்புடன் கேட்டிருந்தனர்.

விருந்தினராகக் கலந்து கொள்வதில் பிரச்சினை இல்லை. இங்கை வீட்டில இருந்து ஏதோ பெரிசா வெட்டி முறியிறனே?

குறிப்பிட்ட தினத்தில் குறிப்பிட்ட நேரத்திற்கு அரைமணி முன்னதாகப் பிரசன்னம் ஆகவேண்டும். அது சரி. பிள்ளையள் தயாராக வெய்யிலுக்கை பெரிய ஆக்களுக்காக, காத்துக்கொண்டு நிற்காமல், விழாவை ஆரம்பிக்கலாம். விழா அமைப்பாளர்களுக்கும் ரென்சன் இல்லை.

அடுத்தது பரிசு வழங்கிக் கௌரவிப்பதும் விருந்தினரின் பணிகளிலொன்று. அவர்கள் தாற பரிசை வாங்கி- அதாவது விழா அமைப்பாளர்கள் தாற பரிசை, வலக்கையாலை வாங்கி, இரு கரங்களாலும் வெற்றிப் பீடத்தில் நிற்கின்ற பிள்ளையிடம் கொடுக்கலாம். அதற்கும் சம்மதம்.

அத்துடன் உரை நிகழ்த்துமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டேன். அங்கைதான் உதைக்குது. சனம் படுகிற பாட்டுக்கை எங்கடை உரையை யாரையா கேட்பினம்? அதுவுமல்லாமல், வீட்டிலை ஏதும் பிரச்சினை என்றால் ஏறு மாறாய்ப் பேசலாம். சின்னப் பிள்ளையளுக்கு முன்னாலே போய்..? தட்டிக் கழிக்கவும் ஏலாது.

ஒரு மாதிரிச் சம்மதிச்சு, 'ஸ்போட்சும்' அதுதான் விளையாட்டுப் போட்டியும். முடியிற கட்டத்துக்கு வந்திட்டுது. அடுத்தது கூட்டமும், கும்மாளமும்,சொறி சொறி, கூட்டமும் பரிசளிப்பு நிகழ்வும். கூப்பிடப் போறாங்கள் பேசுறதுக்குக் காலும் கையும் படபடக்கத் தொடங்குது. பாடமாக்கினதும் அரைவாசி மறந்து போச்சுது.

பேரனுக்குப் பேச்சுப் போட்டிக்குப் போகேக்கை சொல்லி உசார்படுத்தினது தான் ஞாபகத்துக்கு வந்தது. 'நீ பேசத் தொடங்கு. மற்றதெல்லாம் தானாக வரும். பாடமாக்கினது மறந்தது போலத்தானிருக்கும். ஆனால் பேசத் தொடங்கின உடனை மடை திறந்த வெள்ளமா வார்த்தைகள் வரும்' என்று பேரனுக்குச் சொல்லி அனுப்பேக்கை சிம்பிளாகத்தானிருந்தது. ஆனால் இப்ப?

எம் தலைவரும் தனது பங்கிற்கு, அடுத்ததாகப் பரமசிவம் அவர்களை உரையாற்ற அன்போடு அழைப்பதாக அறிவித்து விட்டார். அதென்ன அன்போடு? ரீச்சர் ஒரு பக்கம் கையைப் பிசைஞ்சுகொண்டு நிற்கிறா.. ஒரு மணியிக்கிடையிலை எல்லா நிகழ்ச் சியையும் நடத்தி முடிச்சு, அடுத்த நிகழ்வுக்கு இந்த மைதானத் தைக் கையளிக்க வேணும். இதுகள் இப்பிடி நீட்டி இழுத்துப் பேசிக் கொண்டு நிண்டால்?

பிள்ளையளும் கொஞ்சங் கொஞ்சமாகக் குழம்பத் தொடங்குதுகள்.

'மைக்கை' - அதுதான் ஒலி வாங்கியை இப்ப பேசப் போற ஆக்களின்ரை கையிலை தான் தாறவை. முந்தி முன்னுக்கு ஒரு ஸ்ராண்ட் வைச்சு, அதிலை ஒலிவாங்கியைப் பூட்டிவிட்டால், பேசுறது சுலபமாக இருக்கும். இப்ப கை உழைவிலை ஆவது 'டக்' கெண்டு பேசிப் போட்டுப் போவிடுவினமெண்டு ஆக் கும், கையிலை தூக்கி வைச்சிருக்கச் சொல்லி மைக்கைத் தாறவை. இப்பத்தையில் 'மைக்' பரவாயில்லை. முந்தின எங்கடை காலத்து மைக் எண்டால்.. ஒரு 10 'அவுண்ஸ்' நிறை வரும். அதைக் கையிலை வைச்சுக் கொண்டு கூட்டத் திலை பேசினால், அடுத்த நாள் கை உழைவுக்கு குழைத் தண்ணியிலைதான் குளிக்க வேண்டி வரும்.

பேர் கூப்பிட்டாச்சு. சால்வையைச் சரிப் படுத்திக் கொண்டு பேசத் தொடங்கினேன்.

அனைவருக்கும் வணக்கம். நான் நல்லாப் பேசுவேன். முந்திப் பள்ளிக் கூடத்திலை படிப்பிக்கேக்கை மாணவரைப் பேசுவேன். வீட்டுக்குப் போன உடனை மனைவி மக்களைப் பேசுவேன். இங்கை பேசாது ஒரு கதை சொல்லி அமரலாமென யோசிக்கின்றேன்.

கதை என்ற உடனை பிள்ளையள் கொஞ்சம் அமைதியாகிவிட்டினம்.

கதை என்னென்றால்,

நான் படிக்கேக்கை ஒரு 'சேர்' எங்களுக்குப் படிப்பிச்சவர். அவரை மறக்க முடியாது. நல்ல 'சேர்'.

அவர் 'பிளக்' போட்டிலை 'மற்ஸ்' பாட நேரம் வட்டம் போடுவாரெண்டால், 'ச்சா' நல்ல அழகாக இருக்கும். மேசையிலை வைச்சு, வட்டாரியாலை, அவ்வளவு வடிவா நாங்கள் கூட வட்டம் போட மாட்டம். அவ்வளவு நேர்த் தியாக இருக்கும் ஒரு நாள் நாங்கள் கேட் டம், எப்பிடி சேர் இவ்வளவு நிறு திட்டமாக இந்த வட்டத்தை ஒரு கருவி உபகரணமும் இல்லாமல் கரும் பலகையிலை வரையிறீங்கள் சேர்'?' என்று கேட்டம்.

அவர் உடனை புல்லரிச்சுப் போய், உங்களைப் போல மாணவர்களால் தான், நான் இப்படி அழகான வட்டங்களைப் போடப் பழகினேன். ஒவ்வொருநாளும், ஒவ்வொருத்தருக்கும் பயிற்சி தந்து, அதைப் பொறுமையாகத் திருத்தி, 'மார்க்ஸ்' போட்டுப் போட்டுத்தான் இத்தகைய வட்டங்களை வடிவாகப் போடப் பழகினனான். என்ரை வகுப்பிலை நாற்பது பிள்ளையள். அதிலை இருபது பேரெண்டாலும், 'டபிள் நோட்' எடுப்பியள். அவ்வளவு பேருக்கும் ரெண்டு முட்டையள் போட்டுப் போட்டே நான், வட்டாரி - கொம்பாஸ்- இல்லாமல் வட்டம் போடப் பழகிவிட்டேன். எல்லாம் உங்கடை புண்ணியம் என்றார். அன்றைக்குத் தீர்மானிச் சிட்டம். இனி. 'டபிள் நோட்' எடுக்காமல் பதினொன்று, பன்னிரெண்டு 'மாக்ஸ்' எண்டாலும் எடுக்கவேண்டும் என்று அந்தக் கூட்டத்திலை என்ரை கதையைக் கூறினேன். உடனை பலத்த கை தட்டு.

பதினொன்று எடுப்பதற்குத் திட சங்கற்பம் பூண்டதற்காக் கை தட்டினார்களோ, அல்லது இதோடை 'நிற்பாட்டுங்கோ' எண்டு கை தட்டிச்சுதுகளோ ஒண்டுமா விளங்கவில்லை. உதுகள் விளங்கினால் நாங்கள் ஏன் இப்பிடிக் கூட்டத்துக்குப் போகப் போறம்.?

கை தட்டின உடனை இன்னொரு கதை சொல்லவேணும் போல ஒரு உசார் வந்துது. ஏன்ரை மகள் ஒண்டு, மிக நோஞ்சான். ஒரு கப்பும் சேட்டிபிக்கற்றும் கொண்டு ஓடி வந்து என்னட்டைத் தந்தா.. 'என்ன பிள்ளை எங்கை யாவது, யாராவது போட்டுட்டுப் போயிற்றினமோ?' எண்டு கேட்டன். 'இல்லை அப்பா! இன்றைக்கு ஆயிரத்து ஐநூறு மீற்றர் ஒட்டப் போட்டியிலை நான்தான் முதலாவது. அதுக்குத் தந்தவை' எண்டு சொல்லிச்சுது பிள்ளை. 'ஆஆஆயிரத்தை நூறு மீற்றர் எண்டால் வலு நீளமல்லோ பிள்ளை?' எண்டன். 'ஓம் அப்பா!. எங்கடை பள்ளிக் கூட கிறவுண்டைச் சுற்றி ஏழு றவுண்ட் வரை ஓட வேணும். அப்பிடி ஓடி வாங்கின பரிசு' எண்டிச்சுது பிள்ளை.

'வலு கெட்டிக்காரி. என்னெண்டு அம்மா இவ்வளவு தூரத்தை ஓடி முடிப்பன் எண்ட நம்பிக்கை வந்திச்சுது?' எண்டு கேட்டன்.

'அப்பா நான் நேர்சரியிலை படிக் கேக்கை எனக்கு விளையாட்டுக்குப் பரிசு தந்தவை. படம் எடுத்தவை.. வளர்ந்ததற் குப் பிறகு அந்தப் பரிசையும், சேர்டி பிக்கற்றையும், பார்க்க எனக்கு நம்பிக்கை வந்திட்டுது' என்டிச்சுது பிள்ளை.


'உண்மைதான். இப்பிடியான விளையாட்டுப் போட்டியிலை எல்லாருக்கும் பரிசு கொடுத்துப் பாராட்டுறது என்டிறது, தன்னம்பிக்கை எண்டுற விதையை ஊன்றி, உரமிட்டு, நீர் வார்த்துப் பராமரிப்பது போன்றது' என்று பேசி முடிச்சன். "கைதட்டோ கைதட்டுத்தான்".


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளண்யன்

16

# இருளின் கதவுகளைத் திறந்தவன்



ஆபத்து வந்த பின்னர் அந்தரப்படுவதைவிடவும், என்னென்ன நெருக்கடிகள், எந்தெந்த வழிகளில் வரலாம் என்பதைத் தீர்க்கதரிசனத்தோடு யோசித்து, யூலியன் சில ஏற்பாடுகளைச் செய்துவைத்திருந்தான். தன்னுடைய பாதுகாப்பு ஏற்பாடுகளை விடவும் தனது தகவலாளிகளின் பாதுகாப்பில் யூலியன் அதிக அக்கறை காட்டினான்.

சிலவேளைகளில் தான் மாட்டுப்பட்டாலும் கூடத் தனக்கு உதவி செய்தவர்களுக்கு அதனால் எந்தவிதமான தொந்தரவுகளும் வரக்கூடாது என்பது யூலியனின் எழுதப்படாத விதி. ஆனால் விக்கிலீக்ஸ் உண்டாக்கிய தாக்கங்களின் விளைவாக அவனுக்குத் தினமும் எதிரிகளும், கண்கொத்திப்பாம்புகளாகத் துரத்தும் உளவாளிகளும் பெருகியபடியே இருந்தனர். இதனால் எந்நாளும் நாடோடிபோன்று ஓரிடத்தில் நில்லாது சுற்றித்திரியும் யூலியன் எந்தவொரு விமான நிலையத்தையும் ஒரு சாதாரணப் பயணியாகக் கடக்க முடிந்ததில்லை, ஒவ்வொருமுறையும் பலமணி நேரச் சோதனையையும், அவனது மடிக்கணினி முழுதும் பிரதியெடுக்கப்படுதலையும் தவிர்க்க முடிந்ததில்லை. யூலியன் சாதாரணமாகத் தொலைபேசியில் பேசுவது கூட மிக மெல்லிய குரலில்தான். தன்னைச் சுற்றி யாரும் இருக்கிறார்களா என்று எச்சரிக்கையுடன் பேசுவது போல மிகுந்த இடைவெளி விட்டு, மிகக் குறைந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியே அவன் பேசுவது வழக்கம். இதுவரை யாருமே யூலியனை, ஒருமுறை தொடர்பு கொண்ட எண்ணில் மறுமுறை தொடர்பு கொள்ளமுடிந்ததில்லை. ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு தொலைபேசி இலக்கத்தில் இருந்துதான் யூலியனின் குரல் வெளிப்படும். ஏறக்குறைய ஒரு இரகசிய உளவாளியை விடவும் யூலியனின் நடவடிக்கைகள் விசித்திரமானதாக இருந்தன.

இவற்றையெல்லாம் மாற்றாவிட்டால், மாட்டிக் கொள்வோம் என்பது யூலியனுக்கு அத்துப்படி. அதேபோன்று இவற்றையெல்லாம் செய்யாவிட்டால் விக்கிலீக்ஸைத் தன் எதிரிகள் துவம்சம் செய்துவிடக்கூடும் என்பதுவும் யூலியனுக்கு நன்கு தெரிந்திருந்தது. தான் இறக்கநேரிட்டாலும் கூட குறித்த காலத்துக்கு விக்கிலீக்ஸ் அதிர்வுகளை இடையறாது ஏற்படுத்தியபடியேதான் இருக்க வேண்டும் என்பது அவனது எண்ணம். அத்துடன் இணையத்தள வலையமைப்பை எவ்வாறு முடக்கலாம் என்பதில் நிபுணத்துவம் பெற்ற யூலியனுக்கு அதற்கான மாற்று மருந்தும் தெரிந்தேயிருந்தது.

ஒரு இணையத்தளத்துக்கு ஒரே நேரத்தில் எத்தனை வழங்கிகளையும் மாற்று ஏற்பாடாகச் செய்து வைக்கலாம். உலகமெங்கும் இணைய வல்லுநர்களை ஆர்வலர்களாகக் கொண்டிருந்த விக்கிலீக்ஸ் தளத்துக்கு உலகெங்கும் 20க்கும் மேற்பட்ட வழங்கிகள் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் எந்த நாடுகளில் உள்ளன, யார் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது, அவற்றைப் பராமரிப்பது யார் போன்ற கேள்விகளுக் கான பதில்கள் யூலியனுக்கு மட்டுமே தெரிந்த இரகசியம்.

யூலியனின் மதியூகத்தைக் குறைத்து எடை போட்டதுதான் சுவிஸ் வங்கியின் முட்டாள் தனம். விழுந்தடித்துக் கொண்டு, அமெரிக் காவில் வழக்காடி, விக்கிலீக்ஸின் அங்கிருந்த பிரதான வழங்கியைத் தனது கெட்டித்தனத் தால் முடக்கி விட்டதாக சுவிஸ் வங்கி கனவு கண்டுகொண்டிருந்த போது, உலகின் இன்னொரு பாகத்தில் உறக்கத்தில் இருந்த விக்கிலீக்ஸின் மற்றொரு வழங்கி, சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்தது. ஒரு கணம் கூட தொழினுட்பக்கோளாறு உண்டாகா வண்ணம் விக்கிலீக்ஸைத் தொடர்ந்து பார்வையிட முடிகின்றது என்ற தகவல் சுவிஸ் வங்கியின் முகத்தில் அசடு வழியச்செய்தது.

ஆனாலும் தொடர்ந்தும் ஏதோ ஒருவிதத்தில் யூலியனுக்கு நெருக்கடிகள் வந்தவண்ணமேயிருந்தன. அவற்றைச்சாமளிப்பதிலேயே யூலியனின் நேரத்தை வீணடித்து அவனது இணையத் தகவல் வேட்டைக்கு முட்டுக்கட்டை போடலாம் என்பதே பலரதும் எண்ணமாகவிருந்தது. ஆனால் யூலியன் தன்னைநோக்கி எய்யப்பட்ட எல்லாச் சவால்களையும் ஏதோ சுவிங்கத்தை மெல்வது போல வெகு எளிதாகத் தோற்கடித்தபடியே தன் இணையக்கண்ணாம்மூச்சி ஆட்டத்தைத் தொடர்ந்து அசுர வேகத்தில் ஆடியபடியே இருந்தான். எந்தப்பக்கத்தால் தாக்கினாலும் அந்தப்பக்கமாக தன் எதிர்த்தாக்குதலை யூலியன் ஒற்றை ஆளாகச் சமாளிக்கும் இரகசியம் எவருக்கும் புரியவில்லை. ஏறக்குறைய ஒரு மாயாவியின் சாகசங்கள் போலவே யூலியனின் எதிரடிகள் அமைந்தன.

யூலியனுக்குப் பொறி வைத்துக் களைத்துப் போன எதிரிகள் தமது அடுத்தகட்ட நகர்வு பற்றி கடுமையாக ஆலோசித்தனர். யூலியனுக்கு தகவல்களை வழங்குபவர்களைக் கண்டு பிடித்து அவர்கள் மூலம் யூலியனுக்கு எதிரான ஆதாரங்களைத் திரட்ட முடியும் என்பதே அந்த ஆலோசனையின் விளைவாக அவர்கள் கண்டறிந்த புதிய உபாயமாக இருந்தது. ஏனெனில் யூலியனைப் போல தம் பாதுகாப்புத் தொடர்பாக அவரது தகவலாளிகள் எல்லோருமே இருக்க மாட்டார்கள் என்பதால், அவர்களில் ஒருவரையாவது தமது வலைக்குள் சிக்கவைத்து விட்டால் போதும். அதன் பின் யூலியனின் வாலை ஒட்ட நறுக்கி விட முடியும் என்ற எண்ணத்தோடு உலகெங்கும்

யூலியனின் தகவலாளிகளைத் தேடி வலை விரிக்கப்பட்டது. யூலியனே எதிர்பாராத வகையில் அவனது தகவலாளி ஒருவர் எதிரிகளிடம் சிக்க வேண்டியும் வந்தது. அந்தத் தகவலாளியை எப்படி மடக்கினார்கள்? அதிலிருந்து யூலியனால் மீள முடிந்ததா?

ஒருநாள் பனியில் நனைந்தபடி சூரியனின் உதயம் நிகழ்ந்து கொண்டிருந்த தருணமொன்றில் யூலியனுக்கு ஒரு மின்னஞ்சல் அவசரத்தனத்தோடு வந்திருந்தது: அதுவும் மிக முக்கியமான ஒரு தகவலாளியிடமிருந்து மின்னஞ்சலில் வரையப்பட்டிருந்த தகவல் யூலியனைப் பரபரப்படைய வைத்தது.

ஊடகச்சுதந்திரத்துக்குப் பெயர்பெற்ற அவுஸ்திரேலியாவில் சட்டவிரோதமாக இயங்குகின்ற அல்லது அந்த நாட்டின் சமூகநடவடிக்கைகளுக்கு ஒவ்வாத இணையத்தளங்கள் சில தடைசெய்யப்படப்போகின்றன என்பதே அந்த மின்னஞ்சல் சுமந்து வந்த செய்தி. இதில் பரபரப்படைவதற்கு என்ன இருக்கின்றது?.

வெளிப்பகட்டுக்கு தன்னை ஒரு ஊடகச்சுதந்திரத்துக்கு தடைபோடாத கனவானாகக் காட்டிக் கொண்டாலும் உள்ளுக்குள் மிகமோசமாக ஊடகக்குரல்வளையை நெரிப்பதை அவுஸ்திரேலியாவில் பிறந்து வளர்ந்து, அவுஸ்திரேலிய அரசுக்கே தண்ணி காட்டிய யூலியன் அறிந்தே வைத்திருந்தான். ஆனாலும் மற்றைய நாடுகளுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் ஒரு சின்ன வித்தியாசம் இருக்கவே செய்தது.

பிறநாடுகள் பழைய வில்லன் வீரப்பா போல உச்சஸ்தாயில் கத்திக் குளறி, தாம் செய்கின்ற ஊடக அடக்குமுறைகளைத் தாமே உலகுக்குப் படம் போட்டுக் காட்டுவிடுகின்றன. அவுஸ்திரேலியா இந்த விடயத்தில் சைலண்ட் கில்லர். தம்மால் செத்தழியப்போகும் ஊடகமே உணராதவண்ணம் அதன் கதையை முடித்துவிடும் கெட்டித்தனம் கொண்டது.

(திரைகள் இன்னமும் திறக்கும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசின் அடா சண்டே டைம்ஸில் நடலாபைசுல்கக் எழுதியது.

தமிழில்: ஜஸ்ரின்

# அதிகரிக்கும் வன்புணர்வுகள்



## ஓர் அபாய எச்சரிக்கை

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் புள்ளிவிபரப் பதிவுகளின் படி 2008ஆம்ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரைக்குமான காலப்பகுதியில் 16வயதுக்கு குறைந்த சிறுமியர் மீதான பாலியல் வன்புணர்வுகள் அதிகரித்து வந்திருப்பதைத் தெளிவாக அறிந்து கொள்ளமுடிகிறது. இதனைக் கீழ் வரும் அட்டவணை காட்டுகிறது.

| வருடம் | பாதிக்கப்பட்ட பெண்கள் | 16 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் |
|---|---|---|
| 2008 | 1282 | 1157 |
| 2009 | 1624 | 1228 |
| 2010 | 1854 | 1446 |
| 2011 | 1871 | 1463 |
| 2012 | | |
| செப்ரெம்பர் | 1853 | 1405 |

உள்ளூர் பெண்களுக்கு மாத்திரமல்லால் வெளிநாடுகளிலிருந்து வரும் பெண்கள் கூட இந்தக் கொடுமையிலிருந்து தப்ப முடிவதில்லை. இலங்கையில் ஒவ்வொரு 90 நிமிடத்திற்கும் ஒரு பெண் வன்புணர்வுக்கு உட்படும் அதிர்ச்சித் தகவலை புள்ளி விபரங்கள் வெளிப்படுத்துகின்றன.

### சம்பவம் 01

அண்மையில் கிளிநொச்சி, பூநகரியில் மூன்று பிள்ளைகளின் தாயான 38 வயது பெண் ஒருவர் வீட்டுக்கு அருகில் உள்ள தோட்டத்தில் பனையோலை வெட்டச் சென்றுள்ளார். அப்போது அவர் இனந்தெரியாத இருவரினால் கடந்த வாரம் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டார்.

அந்தப் பெண் பூநகரி மருத்துவமனைக்கு விரைந்து கொண்டு செல்லப்பட்டார். ஆயினும் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தார்.

### சம்பவம் 02

தென்கொரியத் தூதரகத்தின் பணியாளரான 27வயதுடைய தென்கொரியப் பெண்ணொருவர் திருகோணமலையில் இருந்து பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தார். ஆயினும் ஆள்கள் நடமாட்டம் குறைந்த பகுதியில் பஸ்ஸின் நடத்துநர் அந்தப் பெண்ணை பாலியல் ரீதியான தொல்லைகளுக்குட்படுத்தியுள்ளார். அவரின் தொல்லைகளைத் தாங்க முடியாத தென்கொரியப் பெண் நிட்டம்புவ என்ற இடத்தில் பஸ்ஸை விட்டிறங்கி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதனையடுத்து, அந்த நடத்துநர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் இம்மாத இறுதி வரைக்கும் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

### சம்பவம் 03

பாணந்துறையைச் சேர்ந்த தந்தையொருவர் வயதுக்கு வந்த அவரது சொந்த மகளை எட்டு வருடங்களாகப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார். இந்த விடயம் இப்போது தான் வெளிவந்துள்ளது. குறித்த தந்தை கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

### சம்பவம் 04

பிரத்தியேகமாகக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர், கல்கிரியகமவிலுள்ள கனிஷ்ட பாடசாலையொன்றின் தரம் 04 ச் சேர்ந்த 11 மாணவிகளைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியுள்ளார். அவரும் கைது செய்யப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட மாணவிகள் அத்தனை பேரும் சந்தேக நபரிடம் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்காகக் கல்விகற்கச் செல்பவர்கள்.

### சம்பவம் 05

தம்புத்தேகம பாடசாலையின் உடற்பயிற்சி ஆசிரியர் ஒருவர் 15 வயதான மாணவிகளை உடற்தகுதி பரிசோதனை செய்வதற்காக கொழும்புக்குக் கூட்டிச் செல்வதாகப் பெற்றோர்களுக்குக் கூறிவிட்டு அவர்களைப் பியகமவில் உள்ள விடுதியொன்றில் தங்க வைத்துள்ளார். அவர்களில் நால்வரை நிர்வாணமாகப் புகைப்படங்களை எடுத்துள்ளார். எனினும் பின்னர் அந்த உடற்பயிற்சி ஆசிரியரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். பொலிசாரின் விசாரணைகளைத் தொடர்ந்து குறித்த ஆசிரியர் இரண்டு மாணவிகளுடன் பாலியல்தொடர்பில் ஈடுபட்டதும் அவர்களின் நிர்வாண படங்கள் அவரின் மடிக்கணனியில் இருப்பதுவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

### சம்பவம் 06

அத்துக்கிரியாவில் உள்ள 12 வயதுச் சிறுமி ஒருத்தியைச் கடுவெல உள்ளூராட்சிசபை அரசியல்வாதியொருவர் வன்புணர்வில் ஈடுபடுத்தியதால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில வருடங்களாகப் பாலியல் வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை கவலையளிக்கும் விதத்தில் அதிகரித்துள்ளது. வயது குறைந்த சிறுமியரே அதிகளவில் பாலியல் கழுகுகளுக்கு எளிதில் இரையாகி விடுவதாகப் பொலிஸாரின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

அதிர்ச்சியளிக்கும் இந்தப்புள்ளி விபரங்களைஅண்மையில் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நாடாளுமன்றில் வெளியிட்டார்.

"பெரும்பான்மையான பாலியல் வன்முறைகள் கண்டி, அனுராதபுரம் மற்றும் கொழும்பு மாவட்டங்களிலேயே இடம்பெற்றுள்ளன. அனுராதபுரமும் அதனையடுத்து குருநாகல் மாவட்டத்திலுமே அதிகளவிலான சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்றுள்ளன. பெரும்பாலான சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளில் குற்றவாளிகளாகக் காணப்படுபவர்கள், பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப அங்கத்தவர்களாகவோ அல்லது அந்தக்குடும்பத்தவர்களுக்கு நன்கு தெரிந்தவர்களாகவோ இருக்கின்றனர் என்ற உண்மை ஆய்வுகளில் இருந்து வெளியாகியுள்ளது"- என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பெண்களின் உரிமைகள் அமைப்பின் முக்கியஸ்தர்களில் ஒருவர் கருத்து தெரிவிக்கையில், இலங்கையில் 90 நிமிடங்களுக்கு ஒரு பெண் கற்பழிக்கப்படுகின்றனர். அதுமட்டுமன்றி, அரச உத்தியோகங்களைத் தேடிவரும் உதவியற்ற பெண்களையும் அரசியல்வாதிகளும் அவர்களுடைய அடியாட்களும் பாலியல்ரீதியாக இம்சிக்கின்றனர். கணவரைப் பிரிந்த நிலையில் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த வயது குறைந்த பெண்களே குடும்பச் சூழலில் அவர்களுக்குப் போதிய அன்பு கிடைக்காமையால் ஆண்களுக்கு அதிகளவில் இரையாகி விடுகின்றனர் -என்றுள்ளார்.

பொதுப்போக்குவரத்தில் வாகனங்களில் பயணிக்கும் 95 வீதமான பெண்கள் பாலியல் தொல்லைகளுக்கு ஆளாகிவருகின்றனர் எனக் கூறுகிறார் சிரேஷ்ட சமூக விரிவுரையாளர் கரிணிஅமரசூரிய.

கொழும்பு பல்கலைக்கழகப் பிரதி தலைவரும் பேராசியருமான சாவித்திரி குணசேராவும் இவரது கருத்துக்களைப் பிரதிபலிக்கிறார். - குற்றவாளிகள்இலகுவில் தப்பிவிடுவதாக மக்கள் நம்புகின்றனர் . இது குறித்து உயர்மட்ட அதிகாரத்தில் இருப்பவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும் அவர்கள் தமது கட்டுப்பாட்டில் இருந்து தவறிவிடுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் குற்றவியல் துறையின் தலைவரான பேராசிரியர் எம்.டபிள்யூ.ஜயசுந்தரவும் சமூகக் கட்டுப்பாட்டினை இழத்தல், இயலாமற் போதல் ஆகியவற்றின் காரணமாகவே கடுமையான பாலியல் குற்றச் செயல்கள் நிகழ்கின்றன எனத்தெரிவித்துள்ளார். அத்துடன் இவ்வாறான வழக்குகள் தாதமின்றி விசாரிக்கப்பட்டு குற்றவாளிகளுக்குத் கடுந்தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் வழக்குகள் காரணமின்றி இழுத்தடிக்கப்படுவதன் காரணமாகக் குற்றமிழைத்தவர்கள் அச்சமின்றி இருக்கின்றனர் எனவும் கவலை தெரிவித்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தின் சிறுவர் மற்றும் பெண்களுக்கான துறையின் சிரேஷ்ட மேலதிகாரியான ஜயந்த விக்கிரமசிங்க கருத்து தெரிவிக்கையில் - வயது குறைந்த பெண்களுடனான வன்புனர்வுச் சம்பவங்களில் 70 வீதமானவை அப்பெண்களின் சம்மதத்துடனே இடம் பெற்றுள்ளன. அவை மிரட்டல்களின் மூலம் ஏற்பட்ட அச்சத்தின் காரணமாக இருக்கக் கூடும், எனினும் இத்தகைய சம்பவங்களின் போது தாமதமின்றி உடனடியாகக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சகல பொலிஸ் பிரிவுகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது- என்றுள்ளார்.

என்ன தான் சட்டங்கள் போட்டாலும் கருத்துகளைச் சொன்னாலும் வன்புணர்வுகள் தொடர்ந்து கொண்டே செல்கின்றன. அவதானமாக இருக்க வேண்டியது பெண்களும் அவர்களின் பெற்றோர்களும் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் உலகம்

## மடப்பயலே!

**ஒரு** கிராமத்தில் ஒரு விவசாயி இருந்தான். ஒருநாள் அவன் தன் கழுதையைக் கயிற்றினால் கட்டி வீட்டுக்கு இழுத்து வந்து கொண்டிருந்தான்.

வரும் வழியில், ஒரு திருடன் ஒருவன் அவனைப் பார்த்தான். அந்த விவசாயி ஒரு நல்ல ஏமாளி என்பதைத் தெரிந்து கொண்டான்.



நல்ல புத்திசாலி யான அந்தத் திருடன் தன் நண்பனைப் பார்த்து, 'அந்த விவ சாயி இழுத்துச் செல் லும் கழுதையை அவன் அறியாத வண் ணம் திருட வேண் டும்' என்று சொன் னான்.

வியப்பு மேலிட அவன் நண்பன், 'எப்படி உன்னால் அந்தக் கழுதையை அவன் அறியாத வண்ணம் திருட முடியும்?' என்று ஆவலுடன் கேட்டான்.

அதற்கு அந்தத் திருடன், 'சத்தமின்றி என் பின்னாலேயே வா! உனக்குப் புரியும்' என்று சொன்னான்.

அந்த விவசாயியின் பின்னாலேயே சத்தமின்றிச் சென்று கழுதையை கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டு, கழுதையை ஓட்டிச் செல்லுமாறு தன் நண்பனுக்கு சைகை செய்தான்.

பிறகு அந்தக் கயிற்றைத் தன் கழுத்தில் கட்டிக் கொண்டு அவன் பின்னாலேயே சென்றான்.

தன் நண்பன் ஓட்டிச் சென்ற கழுதை கண் பார்வையை விட்டு மறைந்ததும், அவன் நகராமல் அப்படியே நின்றுவிட்டான்.

கழுதையை இழுத்து வந்த விவசாயி கயிற்றை இழுத்துப் பார்த்து வராததால், திரும்பிப் பார்த்தான். தன் கழுதைக்குப் பதில் அந்தக் கயிற்றில் மனிதன் இருப்பது கண்டு திகைத்தான்.

(அடுத்தவாரம் தொடரும்......)



## பெண்டகன்!

**ஒ**ரு அரசாங்கத்தின் அலுவலகங்களைக் கொண்ட மிகப்பரந்த அளவில் உருவாக்கப்பட்ட கட்டடம் பெண்டகனாகத்தான் இருக்கும். பெண்டகன் என்பது ஐந்து பக்கங்களையுடைய ஓர் அமைப்பைக் குறிக்கும். அமெரிக்க அரசாங்கத்தின் பாதுகாப்புத்துறை அலுவலகங்களை கொண்ட வாஷிங்டனில் உள்ள கட்டடம் ஐந்து பக்கங்களுடைய அமைப்பு. ஆகவே, அதற்குப் பெண்டகன் என்றே பெயரிட்டுள்ளனர்.

இக்கட்டடத்துக்கு 1943ம் ஆண்டு ஜனவரி 15ம் தேதியன்று திறப்பு விழா நடைபெற்றது. இதன் கட்டுமானச் செலவு 63 மில்லியன் டாலர்கள். (3,45,83000 பவுன்கள்) வேலை நாட்களில் இக்கட்டடத்தில் 29 ஆயிரம் மக்கள் பணிபுரிகின்றனர். இக்கட்டடத்தின் டெலிபோன் இணைப்பு 44 ஆயிரம். இணைப்புக் கொடுக்கப்பட்டிருப்பதோ 1.60 ஆயிரம் மைல்களுக்கான, 2,57,500 மீட்டர் கேபிள்கள். பெண்டகனில் டெலிபோனைக் கவனிக்கும் ஊழியர்கள் மட்டும் 220 பேர். ஒரு நாளைக்கு உத்தேசமாக 2,80 ஆயிரம் அழைப்புகளை சமாளிக்கின்றனர்.

## தோமஸ் அல்வா எடிசனின் கண்டுபிடிப்புக்கள்

01. வாக்குப் பதிவுக் கருவி
02. கிரோமோ போன்
03. பேசும் சலனப் படம்
04. அசையும் காட்சி களைக் காட்டும் கமரா.
05. எடிசன் பற்றரி (கார மின்பகு பொருள் பயன்படுத்தப்படுகின்றது)
06. 40 மணித்தியாலத்திற்கு மேல் ஒளிரத்தக்க வெப்ப ஒளிர்வு மின்குமிழ்.

சி.ஜொனி, தரம் - 9,
கிளி/ இந்துக் கல்லூரி.

## கண்டுபிடியுங்கள்

கொடுக்கப்பட்டுள்ளஉயிரினங்களின் பெயர்கள் கட்டங்களில் மறைந்துள்ளன. அவற்றை வட்டமிட்டுக் கண்டுபிடியுங்கள்.



| | | | | | |
|---|---|---|---|---|---|
| H | S | I | K | B | N |
| E | H | D | U | C | K |
| N | E | A | G | L | I |
| O | E | C | O | W | A |
| A | P | R | A | X | R |
| T | L | Y | T | K | T |



# கேள்வி ஒன்று: பரிசு 1000 ரூபா

மாணவ, மாணவியரே! கூப்பனுக்குள் உள்ள கேள்விக்கு என்ன விடை என்று தெரியுமா? தெரிந்தால் உடனே எழுதி கூப்பனைக் கத்தரித்து 13.09.2013 இற்கு முன்னர் அனுப்பிவையுங்கள். சரியான விடை எழுதியோரில் ஒருவருக்கு 1000 ரூபா பணப்பரிசு காத்திருக்கிறது.

(வெற்றி பெற்றவர்களின் புகைப்படங்களும் பிரசுரிக்கப்படும். ஆகவே விரும்பியோர் புகைப்படங்களையும் இணைத்து அனுப்பலாம்).

கேள்வி:-

ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் யார்?

பதில்:- ..........................................

பெயர் :- ..........................................

தரம் :- ..........................................

பாடசாலை :- ..........................................

அனுப்ப வேண்டிய முகவரி:
கேள்வி ஒன்று: பரிசு 1000 ரூபா.
சுடர் ஒளி
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

02

பரிசுக்கான அனுசரணை:-


NORTHERN COMPUTERS
Innovative Solutions!
#303,Kasthuriyar Road,Jaffna
e-mail : ncjaffna@gmail.com
Cont : Shukoor - 077 555 97 55

FREE:Norton Internet Security With All Laptops

HP Pavilion 15 - e016TU
i3 3rd Generation
4GB Ram
500GB HDD
15.6"LED Screen
WiFi
DVD RW
Laptop Bag
Price :Rs.64,000
01 Year Parts Warranty
02 Years Service Warranty

HP Pavilion G6-2311TU
i5 3rd Generation
4GB Ram
750GB HDD
15.6"LED Screen
WiFi
DVD RW
Laptop Bag
Price :Rs.79,500
01 Year Parts Warranty
02 Years Service Warranty

HP 1000 - 1311TU
Intel Dual Core 3rd Gen
2GB Ram
500GB HDD
14"LED Screen
WiFi
DVD RW
Laptop Bag
Price :Rs.52,500
01 Year Parts Warranty
02 Years Service Warranty

DELL Inspiron - 3521
i3 3rd Generation
4GB Ram
500GB HDD
15.6"LED Screen
WiFi
DVD RW
1GB Dedicated VGA
Laptop Bag
Price :Rs.67,500
01 Year Parts Warranty
02 Years Service Warranty

Toshiba Satellite C850
i3 3rd Generation,2GB Ram
500GB HDD,15.6"LED Screen
WiFi,DVD RW,Laptop Bag
Price :Rs.59,000
01 Year Parts Warranty
02 Years Service Warranty

எம்மிடம் சகல விதமான கணினிகள் , அனைத்து விதமான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் அதன் உதிரிப்பாகங்களையும் நியாயமான விலையிலும் நம்பகரமான உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ளலாம்.




## மாயத் தீவில் மந்திரக் கிழவி

சிறுவர் மர்மத் தொடர் 17 – அம்புலி

மந்திரக்கிழவியின் ஆணைப்படி, இளவரசர்கள் இருவரையும் 'தர தர' வென இழுத்துச் சென்ற இராட்சதர்கள், குகையொன்றினுள் அவர்களை அடைத்தனர். குகையின் வாசலையும் ஒரு பெரிய பாறாங்கல்லால் மூடினர்.

குகையினுள்ளே ஒரே கும்மிருட்டு. இளவரசர்கள் இருவரும் முதலில் ஒன்றுமே தெரியவில்லை. அந்தளவிற்கு குகையெங்கும் இருள் ஆக்கிரமித்திருந்தது. எனினும் சிறிது நேரத்தில் அந்த இருட்டுக் கண்களுக்கு பழக்கமாகி காட்சிகள் கலங்கலாகப் புலப்படத் தொடங்கின. அதன் பின்னர் குகையின் ஒரு ஓரமாக மேடாக இருந்த இடத்தில் அமர்ந்து கொண்டனர்.

"இங்கிருந்து எப்படித் தப்பிப்பது?" என்று இந்திரவர்மன் கேட்டான்.

"இந்திரவர்மா! எங்களை ஒன்றுமே தெரியாத சிறுவர்கள் என்று தான் மந்திரக்கிழவி எண்ணுகிறாள். அந்த எண்ணத்தை சாதகமாக்கினால் நாம் தப்பிக்க முடியும்!" என்று பதில் சொன்னான் சந்திரவர்மன்.

"நான் கற்ற வித்தைகளெல்லாம் இந்தக் கிழவியின் மந்திரசக்திக்கு முன்னால் தாக்குப் பிடிக்குமா?" என்றான் இந்திரவர்மன்.

"யானைக்கும் அடி சறுக்குவதுண்டு. அது போல மந்திரக் கிழவியின் பலவீனம் என்ன என்பதை அறிய வேண்டும். அதற்கான வேலைகளில் நாம் இப்போதே இறங்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே தான் கட்டியிருந்த இடுப்புப் பட்டியை அவிழ்த்தான் சந்திரவர்மன். அந்த இடுப்புப் பட்டியின் உட்புறமாக கைவிட்டு, அதனுள் இருந்த இரத்தின கல் ஒன்றை வெளியே எடுத்தான். மஞ்சள் நிறமான அந்த இரத்தினம் ஒளி வீசத் தொடங்கியதும், குகையில் இருந்த இருள் காணாமல் போனது.


அதே போல் இந்திரவர்மனும் தன் காலணியைக் கழட்டி அதனுள் இருந்த கண்ணாடித் துண்டு ஒன்றை வெளியே எடுத்தான். அதைக் கீழே வைத்துவிட்டு ஏதோ ஒரு மந்திரத்தை அவன் முணுமுணுத்தான். அடுத்த நொடியே அந்தக் கண்ணாடியில் இளவரசர்களின் குருநாதரின் முகம் தெரியத் தொடங்கியது. (மந்திரக் கிழவி வருவாள்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினிகுமாரன்

# பதவிகளும் கோட்டான்களும்



உலகிலேயே மிகச்சிறிய நாடுகளில் ஒன்று இலங்கை? உலகிலேயே மிகப்பெரிய அமைச்சர்கள் தொகையைக் கொண்ட நாடும் இலங்கை தான்!

கல்விக்கு ஒரு அமைச்சர். உயர்கல்விக்கு ஒரு அமைச்சர் கல்விச் சேவைகளுக்கு ஒரு அமைச்சர் என ஒரே துறையில் பல அமைச்சர்கள். இவ்வாறே நிதி, நீதி, விவசாயம் என ஒவ்வொரு துறைகளும் விரிந்து அமைச்சுப் பதவிகளால் அலங்கரிக்கப்பட்டுக் கிடக்கின்றன. இவர்களை விட மூத்த அரசியல் வாதிகளுக்கு கௌரவம் அளிக்கும் முகமாக சிரேஷ்ட அமைச்சுப்பதவிகள்.

அடுத்தகட்டம் அமைச்சுகளுக்கு கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிகள். அந்த வகையிலும் விரிந்து கிடக்கின்றன ஏராளமான பதவிகள். அத்துடன் நின்று விட்டனவா பதவிகளின் தலையெடுப்பு. அதுதான் இல்லை. ஒவ்வொரு துறைக்கும் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பல பதவிகள் இருந்தபோதும், அத்துறைகளின் ஜனாதிபதி ஆலோசர்களாக, பிராந்திய இணைப்பாளர்களாக இன்னும் பல பதவிகள். அதாவது பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்து கிடக்கும் பதவிகள்! இனி உருவாகப்போகும் பதவிகளுக்காகவும் ஏராளம் பறவைகள் ஆலாய்ப்பறக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வருக்கு என்றுமே ஒருதனிச்சிறப்பு உண்டு. நாடாளுமன்றத்திற்குள்ளும் சரி வெளியிலும் சரி அரசாங்கத்தையோ, ஜனாதிபதியையோ யாராவது விமர்சனம் செய்தால் துள்ளிக் குதித்துப் போர்க் கொடி தூக்கி விடுவார். பள்ளிவாசல்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களைக் கண்டித்து எதிர்க்கட்சியினர் உரையாற்றினாற் கூட கொதித்தெழுந்து அதை எதிர்த்துக் கூக்குரலிட்டுக் குழப்புமளவிற்கு அவர் சிங்களக் கடும் போக்காளர்களைக் கூட வாய்திறக்க விடமாட்டார். ஜனாதிபதியிலும், பாதுகாப்புச் செயலரிலும் அவர் வைத்துள்ள அதீத பக்தி காரணமாக அவர்களைத் துதி பாடுவதில் அளவற்ற இன்பம் காண்பவர் அவர். மதுரையில் சிவபெருமான் மேல் விழுந்த அடி உலகில் உள்ள சகல ஜீவராசிகள் மீதும் விழுந்ததாக ஒரு கதை உண்டு. இங்கு அரச தரப்பின் மேல் எங்கு அடி விழுந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர் அஸ்வருக்குப் உடம்பு நொந்து விடும். அலற ஆரம்பித்து விடுவார்.

இவ்வாறு அவர் செய்த நீண்ட தவத்தின் பயனாக கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினராகும் பதவிப்பேறு அவருக்குக் கிடைத்து விட்டது. இனி ஊடக ஒழுக்கக் கோவைக்குப் புதிய விதிகள் சேர்க்கப்பட்டு, ஊடகங்களுக்குப் தேவாரம் பாடும் அதிகாரம் மட்டும் வழங்கப்பட்டு ஏனைய அதிகாரங்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டால் அதில் ஆச்சரியப்பட எதுவு மேயில்லை.

சுதந்திரமாக எழுத முனையும் ஊடகவியலாளர்கள் நிலைதான் பரிதாபம். ஏற்கனவே பாதுகாப்பு அமைச்சரின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா கொலன்னாவையில் பட்டப் பகலில் சனசந்தடி மிக்க நட்ட நடு வீதியில் துப்பாக்கிப் போர் நடத்தியமையும் அதில் ஜனாதிபதியின் தொழிற்சங்க ஆலோசகர் பாரதலக்ஷ்மன் கொல்லப்பட்டமையும் பழைய செய்திகள், இப்போது துமிந்தசில்வா பிணையில் விடப்பட்டு தனது துரித மக்கள் சேவையை மீண்டும் ஆரம்பித்து விட்டார்.

அண்மையில் பதவிப் பேறு பெற்ற இன்னொருவர் மூத்த ஊடகவியலாளர். அவர் இப்போது ஜனாதிபதியின் ஊடகத்துறை ஆலோசகர். அவர் பதவி பெற்றதுமே தனது பதவியின் பெருமையை நிலை நாட்டும் பணியில் தீவிரமாக இறங்கிவிட்டார்.

அவர் தனது தவப்பயனால் பெற்ற வரத்தின் மகிமையால் முதன் முதலாக தமது தாக்குதலை திருகோணமலை மாவட்டத்தில் விடுதலை புலிகளின் மாவட்டப் பொறுப்பாளரா யிருந்த எழிலனின் மனைவியான அனந்தி சசிதரன் மீதுபிரயோகித்துள்ளார். மாவிலாற்றில் மக்களது விவசாயத்திற்கு கிடைக்க வேண்டிய நீரைத்தடுத்த எழிலனின் மனைவிக்கு மக்களிடம் வாக்குக் கேட்க என்ன உரிமை இருக்கிறது என முழங்கியிருக் கிறார்.

ஒரு மூத்த ஊடகவியலாளர் மாவிலாற்றுச் சம்பவத்தைப் புரியாமல் இருப்பது அல்லது புரிந்தும் புரியாதது போல் நடிப்பது மிக மிக வெட்கக் கேடாகும்.

மாவிலாறு பாரம்பரியமாகத் தமிழ் மக்கள் வாழும் ஒரு கிராமம். அக்குளத்தின் மூலம் தமிழ் மக்கள் பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்து வந்தனர். அங்கு சிங்களக் குடியேற்றம் அமைக்கப்பட்டு குளக்கட்டு உயர்த்தப்பட்டு குளத்துநீர் இருபகுதியினராலும் பயன்படுத்தப்பட்டு வந்தது. தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் இரு பகுதியினருக்கும் தகராறுகள் எழுவது வருடா வருடம் இடம் பெற்று வந்த நிகழ்வுகளாகும்.

2000ஆம் ஆண்டிலும் இதே நிலைமை ஏற்பட்டது. தமிழ் மக்களின் நெல்வயல்கள்விளைந்து கதிர்தள்ளிய நிலையில் தண்ணீரின்றி பாதிப்படையும் நிலை ஏற்பட்டது. தமிழ் மக்கள் சிங்களக்குடியேற்ற வாதிகளுடன் மேற்கொண்ட பல சமரச முயற்சிகள்தோல்வியில் முடியவே தமிழ் விவசாயிகள் தங்கள் பயிர்களைக் காப்பாற்றும் முகமாக சிங்களப் பகுதிக்குள் செல்லும் வாய்க் காலின் கதவுகளை மூடினர். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இக்கதவுகள் இருந்தன என்பது உண்மை. ஆனால் இது விவசாயிகள் மத்தியில் எழுந்த பிரச்சினை. ஏற்கனவே போர்நிறுத்த ஒப்பந்தத்தை முடிவுக் குக் கொண்டு வரக் காரணங்களைக் தேடிக் கொண்டிருந்த அரசு தமிழ் சிங்கள விவசாயிகளுக்கிடையேயான இந்தப்பிரச்சினையைப் கற்பித்துப் பூதாகாரமாக போரை ஆரம்பித்தது.

உண்மையாகவே சிங்கள மக்களுக்கு நீர் வழங்கத்தான் போர் ஆரம்பிக்கப்பட்டிருந்தால் மாவிலாறு கதவுகள் திறக்கப்பட்டதும் போர் நிறுத்தப்பட்டிருக்க வேண்டுமே? தொடர்ந்து நீள வேண்டிய தேவை இல்லையே? கொட்டிக் கிடக்கும் பதவிகளில் ஒன்றைக் கொத்திக் கொண்ட இந்த மூத்த ஊடகவியலாளரை நாம் குறை கூறிவிட முடியாது? அது தாம்பெற்ற வரத்துக்குச் செலுத்தும் நன்றிக்கடன். காணாமற் போனோரினதும், உறவினர்களினதும், சிறையில் வாடுபவர்களின் உறவுகளின் குரலாகவுமே தான் தேர்தலில் போட்டியிடுவதாக திருமதிஅனந்தி சசிதரன் தெரிவித்தது மட்டும் இந்தமூத்த ஊடகவியலாளரின் காதில் விழாதது வியப்புத்தான்.

கோட்டான்களுக்கு பகலில் கண்கள் தெரிவதில்லை எனச் சொல்வார்கள். பதவியைப் பறந்து பறந்து கொத்திய கோட்டான்களுக்கு பகலில் மட்டுமல்ல இரவிலும் கண்களும் காதுகளும் செயற்படமறுப்பது பரிதாபம் தான்!

இப்படிப் பதவிகளைக் கொத்திப் பறக்கும் கோட்டான்களின் கூக்குரல் ஒரு புறம் ஒலிக்க இன்னொரு புறம் பதவிகளைக் கொத்தப் பறக்கும் கோட்டான்களின் அலறல்கள். கிளிநொச்சி மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் கீதாஞ்சலி ஜனாதிபதி நாட்டில் சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தி வடக்கை வேகமாக அபிவிருத்தி செய்வதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனவாதம் பேசி அதைக் குழப்புவதாகவும் தமிழ் மக்கள் இனவாதி களைத் தோற்கடிப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

**பாவம் அவர்!**

கொட்டிக் கிடக்கும் பதவியில் ஒன்றைக் கொத்தப் பறக்கும் பரபரப்பில் இனவாதத்தின் அர்த்தத்தையே புரிந்து கொள்ள முடியவில்லை. ஒருவரது கழுத்தில் இருக்கும் சங்கிலியை ஒருவன் பறிக்கும் போது 'ஐயோ கள்ளன்' என்று கத்தினால், அது கண்களை அவமதிக்கும் குற்றம் என அவர் சாதிப்பார் போலவே தெரிகிறது.

ஒரு இனம் இன்னொரு இனத்துக்கு எதிராகச் செயற்பட்டால் தான் இனவாதம். ஒரு இனம் தன் மேல் திணிக்கப்படும் அடக்கு முறைக்கு எதிராகக் குரல் கொடுத்தால் அது அடிப்படை உரிமைப்பிரச்சினை. இதை விளங்காது அரசியல் செய்வது ஆச்சரியமானது. இவர்கள் நமது தலைமைகளிடம் நற்பெயர் எடுக்க சிறுபிள்ளைத் தனமாக பேசி தங்களைத் தாமே தாழ்த்திக் கொள்வது மிகப் பரிதாப நிலையாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட முதன்மைவேட்பாளர் சின்னத்துரை தவராசா தமிழ்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த விக்னேஸ்வரன், அனந்தி ஆகியோர் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையைச் சந்தித்தமை தேர்தல் விதிகளுக்கு முரணானது எனத் தேர்தல் ஆணையாளருக்கு முறையிட்டுள்ளார். தமிழ்மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குரல் கொடுப்பதும், காணாமல் போனோர் தொடர்பாக அனந்தி போராட்டம் நடத்துவதும் தேர்தல் காலத்தில் மட்டுமே இடம்பெறுவன அல்ல என்பதை ஏனோ அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனினும் அவரது கோரிக்கையைத் தேர்தல் திணைக்களம் நிராகரித்து விட்டது.

எனினும் கொட்டிக் கிடக்கின்ற பதவிகளைக் கொத்திக் கொண்ட கோட்டான்கள் ஒருபுறம் நன்றிக்கடன் தீர்க்கக் கொத்த அலையும் கோட்டான் கூக்குரலிடுகின்றன. இவர்களுக்கு அதிகார பீடங்களால் துரோகத்தின் பரிசாக பதவிகள் வழங்கப்படலாம். ஆனால் மக்களால் வழங்கப்படும் மதிப்பும் பதவிகளும் வர்களால் எட்டப்பட முடியாதவை என்பது தான்உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காதலுக்கு ஏன் கண்ணில்லை....?

**த.ஜாதுஷா,**
**வவுனிக்குளம், முல்லைத்திவு.**

கே :பக்கத்து வீட்டுப் பாலகன் பாலுக்கு அழ, சாமிக்கு எனக்கூறி விக்கிரகங்களுக்கு ஊற்றும் நபர்களைப் பற்றி என்ன எண்ணுகிறீர்கள் பித்தரே?

ப: கடவுளைப் பற்றி தெரியாத ஆக்கள்தான் இப்பிடி செய்யிறது கூட. இதுக்கொரு கதை சொல்லாம்.

ஒரு நாள் உலக மக்கள் எல்லாருக்கும் குறிப்பிட்ட ஒரு இடத்தில காட்சி தரப்போறதாய் கடவுள் அறிவிச்சார். எல்லாரும் குழந்தை, குட்டிகளோட அடிச்சுப் பிடிச்சுக்கொண்டு கடவுள் சொன்ன இடத்துக்குப் போட்டினம். ஆனால் ஒருத்தன் மட்டும் போகேல்ல. அவன் செய்யும் தொழிலே தெய்வம் எண்டு நம்பிறவன். அதால கடவுளைப் பாக்கப் போகாமல் தன்ர வயல்ல உழுதுகொண்டிருந்தான். அப்ப ஒரு வயசான ஆள் வந்து "ஏனப்பு கடவுள நீ பாக்கப் போகேல்லையோ?" என்று கேட்டார். அதுக்கு இவன் "நான் கடவுளப் பாக்கப் போனால் என்ர வயலை யார் பார்க்கிறது? இண்டைக்கு விதைச்சால்தானே இந்தப் பருவத்துக்கு சோறு கிடைக்கும்" எண்டு சொல்லிப்போட்டு திரும்பவும் உழுதுகொண்டிருந்தான். அப்ப அந்த வயசான ஆள் அவனிட்ட "உன்னப்பாக்க கடவுள் வந்தவரெண்டு நீ மற்றவையிற்றச் சொல்லாம்" எண்டு சொல்லிப்போட்டு கடவுளா மாறி காட்சி குடுத்தாராம்.

கடவுளக் காண்றதுக்காக கோயில் குளம் எண்டு அலைஞ்சோ, குடம் குடமா பாலை ஊத்தியோ ஒரு பிரியோசனமும் இல்லை. ஆரோ ஒரு மகான் சொன்ன மாதிரி ஏழையின் சிரிப்பில் தான் இறைவனைக் காணலாம்.

**ந. ஆனந்தன்,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

கே : பித்தரே! துப்பாக்கிச் சூடு நடத்துமளவுக்கு உள்ளுக்குள் பிளவை வைத்துக்கொண்டு எப்படி மாகாணசபைத் தேர்தலை வெல்லப்போவதாக அரச தரப்புச் சொல்கிறது?

ப : அவைக்குள்ள எப்பதான் ஒற்றுமை இருந்திச்சு. எல்லாரும் மகிந்தற்ர பயத் திலதான் ஒண்டா இருக் கிறமாதிரிக் காட்டுகினம். மற்றப்படி எல் லாரும் ஒவ் வொரு பக் கமா அரச



கட்சி எண்ட வண்டில இழுத்துக் கொண்டு நிற்கினம். மற்றக் கட்சியெல் லாம் எதிரணிக் கட்சிகளுக்கு எதிரா பிரசாரம் செய்யேக்க இவை மட்டும் வித்தியாசமாத் தங்கட கட்சிக்கு எதி ராகத்தான் பிரசாரத்தில இறங்கி யிருக்கினம். இப்பிடி குடுமிப் பிடிச் சண்டையின்ர உச்சத்திலதான் தங் களுக்குள்ள தாங்களே துவக்காலை யும் சுடுபட்டவ.


இந்த லட்சணத்திலதான் வடக்கில எல்லா மக்களும் ஒற்றுமையா வாழுற நிலைமையக் கொண்டு வரப்போறதா கூவிக்கொண்டு திரியினம். முதல்ல தங்களுக்குள்ள ஒற்றுமையாய் இருந்து காட்டட்டும். பிறகு சனத்த ஒற்றுமை யாக்கிறதைப் பற்றி யோசிக்கலாம்.

**ச.கஸ்தூரி.**
**பருத்தித்துறை, யாழ்ப்பாணம்.**

கே : பித்தா! காதலுக்கு கண்ணில்லை என்கிறார்களே. இது பற்றி ஏதாவது அனு பவம் உண்டா?

ப : உண்மைதான். காதலுக்குக் கண் மட்டுமல்ல சூடு, சுரணை, வெட்கம், ரோசம், மானம், மரியாதை மற்றும் லொட்டு லொடுக்கு ஒண்டும் இல்லை. அதாலதான் காதலிக் கேக்க பொம்பிளப்பிள்ளையள் காறித்துப் பினாலும் கூட அதைச் சிம்பிளாத் துடைச்சுப் போட்டு அந்தப் பிள்ளைக்குப் பின்னால நாய் மாதிரி அலையிறாங்கள் பெடியள்.

இப்பிடித்தான் என்ர சினேகிதன் ஒருத்தன் ஒரு பிள்ளைக்குப் பின்னால கனநாளா திரிஞ்சவன். கடைசியா ஒருநாள் துணிஞ்சு அந்தப் பிள்ளையிற்ற கடிதத்தையும் குடுத் துட்டு வந்திட்டான். காதலுக்குக் கண் இல் லாததால கடிதம் குடுக்கேக்க அந்தப் பிள் ளையின்ர கழுத்தில இருந்த தாலி அவ னுக்குத் தெரியாமல் போட்டுது. அது அவன்ர பிழையோ? கண்ணில்லாத காதலின்ர பிழை தானே. அதுக்குப் போய் அந்தப் பிள்ளைக் குத் தாலி கட்டினவன் வந்து அந்தச் சினே கிதன் கும்மி எடுத்துப்போட்டான். எனக்கு இன்னமும் தான் அவன் அடிச்சதின்ர நியா யம் விளங்கேல்ல... உங்களுக்குத் தெரிஞ்சாச் சொல்லுங்கோவன்.....



## சொற்சிலம்பம் போட்டி இல: 585

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | | 5 |
| | | ■ | 6 | | | ■ | |
| 7 | | 8 | | ■ | 9 | | |
| | ■ | | ■ | 10 | | ■ | ■ |
| ■ | 11 | | | | ■ | 12 | 13 |
| 14 | | ■ | ■ | 15 | | | |
| 16 | | ■ | 17 | | ■ | | ■ |
| ■ | 18 | | | ■ | 19 | | |

**மேலிருந்து கீழ்**
1. ஓர் இடத்தில் எழுந்தருளியுள்ள தெய்வத்தின் மேல் பாடப்படும் பத்துப் பாடல்கள்.
2. சிறு பறவை
3. ஒரு சிறு கிரகம்
4. சுவைகள் என்று வகுக்கப்பட்டவை
5. நாளைக் குறிக்க கலண்டர் காட்டும் எண்
8. நாய்
10. சத்தத்துடன் வெளிப்படும் மூச்சுக் காற்று
11. மிகையான
12. களைப்பு
13. காய், பழங்களுக்குள் இருப்பது
14. கடவுள்
17. நதி

**இடமிருந்து வலம்**
1. பிரிப்பு
4. அவஸ்தை
6. தப்பு
7. கவிதை பாடுபவன்
9. இசைக் கருவியின் ஒலிக்கு ஆதாரமாக எழுப்பப்படும் ஒலி.
10. கழுவு
11. நிறுவனங்களின் உயர்மட்ட அமைப்பு
12. உயிர்
14. ஓர் உரிச் சொல்
15. கௌரவம்
16. காலின் அடிப்பகுதி படும் வகையில் காலைப் பதித்தல்
17. விழுது விட்டு வளரும் ஒரு மரம்
18. கட்டுவதற்கு உபயோகிக்கப்படுவது
19. அரைகல்

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 585

சொற்சிலம்பம் போட்டி 585 க்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 18 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 18 ஆம் மற்றும் 25 திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**சுடர் ஒளி யாழ். அலுவலகம்.**
**361, கஸ்தூரியார் வீதி.**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 583 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**
1.தகாத, 2. பாரிடம், 3. லயம், 4. திம்பு, 5. நகை, 9.ரகம், 10. உபரி, 11. திறவுகோல், 12. தாமதி, 13. மாமா, 14. தயிர், 17. கறவு, 18. முன்பு

**இடமிருந்து வலம்**
1. தபாலதிபர், 6.காரியாலயம், 7. பகை, 8.தடம்புரள், 10. உதி, 13. மாதம், 15. பற, 16. மகமாயி, 18. முறிவு, 19.திற, 20.நாவு, 21. புயல்.

### போட்டி இல. 582 இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | Y.யோதிகா, இல.15/10. ஆனந்தபுரி. 2 ஆம் ஒழுங்கை.திருகோணமலை. |
| 2ஆம் பரிசு | வி.வேலுப்பிள்ளை, இல. 16/14. சன்கில் கார்டன். பாகொடை றோட். நுகேகொட. |
| 3ஆம் பரிசு | சி.ஜெயந்தினி, சோறன்பற்று. பளை. |

### பாராட்டுப் பெறுவோர்

(1) திருமதி எஸ்.பாக்கியநாதன்,
இல.7, 57 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06

(2) ஐ.தாஜிடீன்,
டீன்ஸ் வீதி, அட்டாளைச்சேனை.

(3) செல்வி.P.செல்வநாயகம்,
இல. 108 - 5/3, மனிங் பிளேஸ், கொழும்பு - 06.

(4) B. கௌசிகன்,
வேலணை மேற்கு, கண்ணபுரம் - 07.

(5) அ.ஷண்முகப்பிரியா,
இராஜ வீதி, நீர்வேலி.

(6) வி.வி.திருச்செல்வம்,
இந்திய உயர்ஸ்தானிகராலயம்,
இல.36 - 38, காலி வீதி, கொழும்பு - 03

(7) S.இராஜாராம்,
இல.6/3, பாம் கார்டின், இரத்தினபுரி

(8) செ.சின்னத்துரை,
இல.131, D - 10, உருத்திரபுரம்.

(9) திருமதி முகுந்தாதேவி ஜெயசோதி,
இல.93 2/5, பீட்டர்சன் வீதி, கொழும்பு - 06.

(10) திருமதி விமலா சித்திரவேல்,
சந்தை வீதி, வந்தாறுமூலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையோருக்கான புதிய பகுதி!

# காதலர் மட்டும்...

## காதல் ஜோதிடம்



### உங்கள் பொருத்தம் எப்படி?

காதலர்கள் கட்டாயம் அறிய வேண்டிய சங்கதிகள்...

**ஆகாத கூட்டணி**

சுக்கிரனும் - செவ்வாயும் ஆகாத கூட்டணி. ஆண், பெண் எந்த ஜாதகமாக இருந்தாலும், விருச்சிக இராசியில் செவ்வாய் இருந்தால் காதல் வேட்கை அதிகம் இருக்கும். விருச்சிக ராசியில் சுக்கிரன் இருந்தால், காதல் ஒரு வெறியாகவே இருக்கும். காதலுக்காக எதையும் செய்யத் துணிவார்கள்.

சுக்கிரனும், செவ்வாயும்கூட்டணி சேர்ந்து அமர்ந்துவிட்டால் கேட்கவே வேண்டாம்.. காதல் வேட்கையைத் தீர்த்துக்கொள்ள எந்த எல்லை வரை போகவும் தயங்கமாட்டார்கள்.

**காதலுக்கு உகந்த இடம் எது?**

பள்ளியில் தொடங்கி, கல்லூரி, பணி புரியும் இடம் என எல்லா இடங்களிலும் காதல் மலர்கிறது. இளம் வயது என்பது பக்குவம் இல்லாத வயது என்பதால் அப்போது மலரும் ஈர்ப்பை காதலாக கருத முடியாது. கல்லூரி காலம் என்பது குழப்பமான பருவம் என்பதால், அந்தக் காதலும் பெரும்பாலும் வெற்றி அடைவதில்லை. ஓரளவு பக்குவம் வந்த பிறகு மலரும் காதல்தான் அந்நியோன்னியமாக, நீடித்திருப்பதாக அமைகிறது. இதுவும் ஜாதகம் மற்றும் அந்தந்த நேரத்தில் உள்ள கிரக அமைப்புகளை பொறுத்ததே. பள்ளி, கல்லூரி பருவத்தில் இலக்னாதிபதி, 5-ம் எண் அதிபதி ஆகியோர் வலுவாக இருந்தால் காதல் போன்றவற்றில் உங்கள் கவனம் செல்லாது. கிரகங்களின் அனுக்கிரகத்தால் நீங்கள் பொறுப்பு உணர்ந்து படிப்பில் கவனம் செலுத்துவீர்கள். பாவ கிரகங்கள், நீச்ச கிரகங்கள் அமைந்தால் காதலின்பால் நாட்டம் ஏற்பட்டு வழிதவறி செல்ல வேண்டிய நிலை ஏற்படும்.

**தோஷமா? சந்தோஷமா?**

திருமணத்துக்கு ஜாதகப் பொருத்தம் பார்க்கும்போது இரண்டு விஷயங்களை முக்கியமாகக் கவனிப்பார்கள். ஒன்று செவ்வாய் தோஷம், மற்றொன்று ராகு-கேது தோஷம். செவ்வாய் லக்னத்துக்கு 2, 4, 7, 8, 12-ல் இருந்தால் தோஷம். ராகு-கேது லக்னம், 2, 7, 8-ல் இருந்தால் தோஷம். இந்த இடங்கள் எல்லாம் காதல் சுகத்தையும், குடும்ப தாம்பத்ய சுகத்தையும், இல்லற வாழ்க்கையையும் குறிக்கும் இடங்களாகும். செவ்வாய் 7, 8-ல் இருந்தால் காதல் உணர்வு அதிகம் காணப்படும். அதற்கு இணையாக, அந்த ஜாதகக்காரருக்கு ஈடுகொடுக்கும் வகையில் இல்லத்துணை அமைய வேண்டும் என்ற நோக்கில்தான், அதேபோல் காதல் உணர்வு அதிகம் உள்ள 7, 8-ல் செவ்வாய் உள்ள ஜாதகமாக பார்த்து சேர்த்தார்கள். ஜோடிகள் இடையே காதல் சுகம் அதிகரிக்க வேண்டும் என்பதைத்தான் இலைமறை காய்மறையாக தோஷ ஜாதகங்களை மட்டுமே சேர்க்க வேண்டும் என்று கூறினார்கள்.

ராகு-கேது விஷயத்திலும் அதே அணுகுமுறைதான். லக்னத்துக்கு 7, 8ல் ராகு-கேது உள்ள ஜாதகத்துடன் அதே சமதோஷமுள்ள ஜாதகத்தை சேர்ப்பதன் மூலம் அவர்களின் ஆசைகள், உணர்ச்சிகள் ஒத்துப்போகின்றன. இருவருக்கும் சரிபாதி இன்பம் கிடைக்கிறது. தோஷம் உள்ள ஜாதகங்கள் சேராமல், ஒருவருக்கு மட்டும் தோஷம் இருந்து மற்றவருக்கு தோஷம் இல்லாதிருந்தால் காதல் சுகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் போய், கருத்து வேறுபாடு ஏற்பட்டு விடுகிறது. அதனால்தான், தோஷம் என்று சொல்லி சம தோஷ ஜாதகத்தைச் சேர்க்கச் சொல்லியிருக்கிறார்கள்.

**கள்ளக்காதல் ரகசியம்**

குரு போக காரகன், சுக்கிரன் காம காரகன். இந்த இருவரும் இணைவது, பார்ப்பதில் நல்லதும் கெட்டதும் இருக்கிறது. இந்த இரண்டு கிரகங்களுக்கும் பாவ கிரக பார்வை, நீச்ச சேர்க்கை ஏற்பட்டால் இரகசிய உறவுகள் ஏற்படலாம். 8-ம் இடத்தில் குரு அல்லது சுக்கிரன் இருப்பதால் ஒன்றுக்கு மேற்பட்டவர்களுடன் காதல் கொள்வதற்கான, கள்ளக்காதல் ஏற்படுவதற்கான சூழல் உள்ளது. ★

## இப்படியும் ஒரு உள்ளம்

எனது நண்பியின் அண்ணாவின் வாழ்வில் நிகழ்ந்த என் மனதைத் தொட்ட ஒரு வித்தியாசமான அனுபவம் இது.

1000/= பரிசு பெற்ற படைப்பு

அவரின் காதல் படகு ஒன்பது வருடமாக ஓடிக் கொண்டிருந்தது. அவர் காதலிக்க ஆரம்பித்து ஒருவாரத்தில் அவருடைய காதலியின் பிறந்த நாள். அதற்காகப் பெறுமதியான, காதலிக்குப் பிடித்தமான ஒரு பரிசை வழங்க எண்ணினார். ஆனாலும் காதலிக்க ஆரம்பித்து ஒருவாரமே என்பதால் காதலியின் விருப்பு வெறுப்புப் பற்றி அதிகம் அவர் அறிந்திருக்கவில்லை. இதனால் "என்ன வேண் டித் தந்தால் ஏற்றுக் கொள்வாய்?" என காதலியிடமே கேட்டார். அதற்கு அவள் சொன்ன பதில். "எனது பிறந்தநாளில் என்னால் யாராவது சந்தோசப்பட்டால் அதுவே எனக்கு ஆத்ம திருப்தி. அதற்காக அருகிலுள்ள சிறுவர் இல்லத்திலுள்ள ஐம்பது குழந்தைகளுக்கு ஒரு நேர உணவு வழங்க உங்களால் முடிந்தால் அதுவே நீங்கள் எனக்கு வழங்கும் பெறுமதிமிக்க பரிசு" காதலியின் பதிலைக்கேட்ட காதலன் பூரித்துப் போனார்.

"இத்தகைய அன்புள்ளம் கொண்டவள் எனக்குக் கிடைத்தது இறைவன் கொடுத்த வரமே!" என உள்ளப் பூரிப்புடன் அன்றுமுதல் தனது காதலி யின் ஒவ்வொரு பிறந்தநாளுக்கும் சிறுவர் இல்லக் குழந்தைகளுக்கு உணவிட்டு அதே பரிசை வழங்கி வருகின்றார்.

**- ஜனகா**, கிளிநொச்சி.

## உள்ளத்தில் பிறந்த உயர்ந்த காதல்



எனது காதலர் உலகிலேயே அரிதாக ஏற்படக்கூடிய உடல் பாதிப்பொன்றுக்கு உள்ளாகியிருக்கலாம். ஆனால் நாங்கள் இயல்பான ஜோடிகளாகவே வாழ்கிறோம் என தோலின் கீழ் கொழுப்பை சேமிக்க முடியாத விநோத உடல் பாதிப்புக்குள்ளான பிரித்தானிய சைக்கிளோட்ட வீரர் ஒருவரின் காதலி தெரிவித்தார்.

டொம் ஸ்டனிபோர்ட் (24 வயது) என்ற மேற்படி இளைஞருக்கு அவரது 12 ஆவது வயதிலிருந்து தோலில் கொழுப்பை சேமிக்க முடியாத பாதிப்பு ஏற்பட்டது.

எனினும் மனம் தளராத டொம் ஸ்டனிபோர்ட், சைக்கிளோட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதில் தனது கவனத்தை திசை திருப்பினார்.

இந்நிலையில் அவருக்கு இணையத்தளத்தில் எதுவித உடல் பாதிப்பும் இல்லாத அலைஸ் மில்லர் என்ற 23 வயது யுவதி அறிமுகமானார்.

ஸ்டனிபோர்ட்டின் தளராத மனத்தால் கவரப்பட்டு தீவிர காதல் கொண்ட அலைஸ் மில்லர், தற்போது ஸ்டனிபோர்ட்டுடன் லண்டனில் வசித்து வருகிறார்.


நான் அவரை முதன் முதலாக நேரில் சந்தித்த போது அவரது விசித்திரமான தோற்றம் எனக்கு கவலை தந்தது. ஆனால் அவரது நட்புறவான உரையாடலும் அவர் பழகும் விதமும் எனக்கு அவர் மீதான காதலை தீவிரப்படுத்தின என அலைஸ் கூறினார். டொம் ஸ்டனிபோர்ட் சராசரி மனிதர்களில் காணப்படுவதுடன் ஒப்பிடுகையில் 40 சதவீதசதைப்பகுதியையே கொண்டுள்ளார்.

உலகில் எம்.டி.பி. நோய் அறிகுறி என்றழைக்கப்படும் இத்த கைய பாதிப்புக்குள்ளான 8 பேரில் டொம் ஸ்டனி போர்ட்டும் ஒருவராவார்.

## காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு

உங்கள் வாழ்வில் அல்லது உங் களுக்குத் தெரிந்தவர்களின் வாழ்வில் காதல் பரிசுகள் பற்றிய சுவாரசியமான சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவற்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எமக்கு எழுதி அனுப்புங்கள்.

தரமானவை வாரந் தோறும் இந்தப் பகுதியில் பிரசுரமாவதோடு, உங்களுக்கு ஆச்சரியமளிக்கும் பரிசுகளும் காத்திருக்கின்றன.



**அனுப்ப வேண்டிய முகவரி:**
**காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு**
**சுடர் ஒளி**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**பரிசு பெற்றவர்கள் வாரநாள்களில் 021 567 7609 என்ற எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு துரிதமாக பரிசினைப் பெற்றுக்கொள்ளலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓநாய்களின் கூட்டுவேட்டை

## குதறப்பட்ட பெண் ஊடகவியாலாளர்

**மும்பை நகரம் பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பானது என்று இதுநாள்வரை பெருமிதத்துடன் சொல்வார்கள் மும்பைவாசிகள். அந்த எண்ணத்தை தகர்த்தெறிந்திருக்கிறது 23 வயதான இளம் பெண் பத்திரிகையாளர் பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம், ஒரு பயங்கர நிகழ்வின் சாட்சியமாக நிற்கிறது.**

மும்பை மகாலஷ்மி ரயில் நிலையத்தையொட்டி பாழடைந்த நிலையில் நிற்கும் சக்தி மில். ஒகஸ்ட் 22, மாலை 6 மணியளவில்தான் அரங்கேறியது அந்தப் பயங்கரம். மும்பையில் இருந்து வெளியாகும் 'லைஃப் ஸ்ரைல்' தொடர்பான ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் பயிற்சி பத்திரிகையாளராகச் சேர்ந்தவர்தான் ரூபாலி (பெயர் மாற்றப்பட்டுள்ளது). 23 வயதான அந்த இளம்பெண்ணுக்குக் கொடுக்கப்பட்ட பணி, மும்பையின் பழைய நிலையில் உள்ள மில்களைப் படமெடுத்து வருவது. சக பத்திரிகை நண்பருடன், 'சக்தி மில்' இருக்கும் இடத்துக்குச் சென்றார் ரூபாலி., அப்போது மணி மாலை 5.30. கட்டடமெல்லாம் இடிந்து, செடி கொடிகள் படர்ந்து, பாழடைந்துபோய் ஒருவித அமானுஷ்ய நிலையில் இருக்கும் அந்த மில்லின் தோற்றத்தைப் பார்த்த இருவருக்கும், அப்போதே ஏதோ தவறான இடத்துக்கு வந்துவிட்டோமோ என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. போதாதற்கு அந்த மில்லின் உள்பகுதிக்குச் செல்லும் பாதை எதுவும் அவர்களுக்குத் தட்டுப்படவில்லை. 'சரி:.. திரும்பிச் செல்லலாம்' என அவர்கள் முடிவெடுத்தபோதுதான் வந்து சேர்ந்தார்கள் அந்த முதல் இரண்டு ஓநாய்களும். பத்திரிகையில் இருந்து புகைப்படம் எடுக்க வந்ததாக இவர்கள் கூறியதைக் கேட்டதும், தந்திரமாகப் பேசிய அந்த நபர்கள், 'உள்ளே இன்னும் சில அடிகள் சென்றால், மில்லுக்குள் செல்ல பாதுகாப்பான வழி உள்ளது' எனக் கூறி அழைத்துச் சென்றுள்ளனர். சிறிது தூரம் சென்றதும் அவர்கள் கூறியபடியே உள்ளே செல்வதற்கு நல்ல பாதை தென்பட்டுள்ளது. அதனால் ரூபாலி, தனது நண்பருடன் உள்ளே சென்று சில புகைப்படங்களை எடுக்கத் தொடங்கி உள்ளார். அதன் பின்தான் அந்தக் கொடூரம் அரங்கேறி உள்ளது, நாங்கள் படமெடுத்துக்கொண்டிருக்கும்போது எங்களுக்கு வழிகாட்டிய அந்த இருவரும் மேலும் ஒருவனை நாங்கள் இருந்த இடத்துக்கு அழைத்துவந்தனர். மூன்றாவதாக வந்த நபர் தன்னை ஒரு ரயில்வே ஊழியர் என அறிமுகப்படுத்தினார். 'இது ரயில்வேக்குச் சொந்தமான இடம். இங்கே நீங்கள் எப்படிப் படமெடுக்கலாம்? நீங்கள் படமெடுப்பதை எங்களது தலைமை அதிகாரி பார்த்துவிட்டார். நீங்கள் எங்களுடன் வாருங்கள்' எனச் சொல்லி அழைத்தான். 'உடனே நான், நாங்கள் உங்கள் அதிகாரியுடன் பேசுகிறோம்' எனச் சொன்னோம். ஆனால் அதனை ஏற்க மறுத்த அவன், எங்களை அவர்களுடன் வருமாறு அழைத்தான். உடனே நான் எனது பத்திரிகையின் புகைப்பட பிரிவு ஆசிரியருடன் செல்போனில் தொடர்பு கொண்டு, 'படம் எடுத்ததற்காகச் சில ரயில்வே ஊழியர்கள் எங்களை அவர்களுடன் வருமாறு அழைக்கிறார்கள்' என்றேன். அவர் உடனே எங்களை அங்கிருந்து வெளியேறிவிடும்படி கூறினார். நாங்கள் இருவரும் அங்கிருந்து வெளியே செல்வதற்காக வாசலை நோக்கி சென்றோம். அப்போது, அந்த மூவரில் ஒருவன், என்னுடன் வந்த சக ஊழியரைத் தடுத்து நிறுத்தி, 'சில தினங்களுக்கு முன் இங்கு ஒரு கொலை நடந்தது. அதனை நீதான் செய்திருப்பாய்' எனக் கூறினான். உடனே நான் அவர்களிடம், 'எங்களை வெளியே செல்லவிடுங்கள்' எனக் கெஞ்சினேன். ஆனால் அவர்கள் என்னை நோக்கிச் சத்தம் போட்டவாறு மிரட்டத் தொடங்கினர். எங்கள் இருவரையும் மில்லின் உற்பகுதிக்கு அழைத்துச் சென்றனர். எங்கள் கமராவையும் செல்போனையும் வைத்துக்கொண்டு எங்களை விட்டுவிடுமாறு அவர்களை கெஞ்சினோம். அதனைப் பொருட்படுத்தாத அவர்கள், எங்கள் இருவரையும் பெல்ட்டை கழற்றுமாறு கூறி, அந்தப் பெல்ட்டாலேயே எனது நண்பரின் கைகளைக் கட்டினர்.



அப்போது அவர்களுடன் மேலும் இருவர் சேர்ந்துகொண்டனர். பின்னர், மூவர் எனது நண்பருடன் இருந்துகொள்ள, மற்ற இருவர் என்னை சுவருக்குப் பின்புறம் இழுத்துச் சென்றனர்., 'எல்லாம் நல்ல படியாகப் போய்கொண்டிருக்கிறதா?' எனக் கேட்டார். உடனே அந்த இருவரில் ஒருவன், உடைந்த பியர் போத்தலின் முனையை எனது கழுத்தில் வைத்தபடியே, 'எல்லாம் நல்ல படியாகச் சென்றுகொண்டிருக்கிறது எனச் சொல்' என்று மிரட்டினான். நானும் பயத்தில் அவன் சொன்னபடியே கூறினேன். இருப்பினும் சந்தேகமடைந்த எனது அம்மா மீண்டும் என்னைப் போனில் அழைத்தார். அப்போதும் அவர்கள் மிரட்டியதால் முன்பு கூறியபடியே சொன்னேன். தொடர்ந்து இரண்டுமுறை போன் வந்ததால், அவர்கள் எனது செல்போனைப் பறித்து, சுவிட்ச் ஓஃப் செய்துவிட்டனர். அதன் பின் ஒருவர் பின் ஒருவராக ஐந்து பேரும் என்னை நாசம் செய்தனர். முதலில் நாசம் செய்தவன் கடைசியாக மீண்டும் ஒருமுறை அதே கொடுமையைச் செய்தான். நடந்த சம்பவங்களைச் செல்போனில் படமெடுத்துக் கொண்ட அவர்கள், 'இதுபற்றி யாரிடமாவது சொன்னாலோ அல்லது பொலிஸுக்குப் போனாலோ படத்தை வெளியிட்டுவிடுவோம்' என மிரட்டி விட்டு அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர்' என நடந்த கொடூரத்தைப் பொலிஸில் வாக்குமூலமாக அளித்துள்ளார் ரூபாலி. மும்பை 'ஜஸ் லோக்' மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ரூபாலி தன்னைப் பார்க்க வரும் நண்பர்களிடம், 'பலாத்காரத்துக்கு ஆளானதால் எனது வாழ்க்கை முடிந்துவிடவில்லை. குற்றவாளிகள் அனைவருக்கும்



கடுமையான தண்டனை அளிக்கப்படவேண்டும். அதே சமயம் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவில் மீண்டும் பணிக்குத் திரும்ப விரும்புகிறேன்' என்று நம்பிக்கையோடு சொல்லி வருகிறார்., கடந்த 30 ஆண்டுகளாகப் பாழடைந்துபோய் கிடக்கும் சக்தி மில் வளாகம் குடிகாரர்கள், சூதாடிகள், போதை மருந்து உட்கொள்பவர்கள், திருடர்கள் போன்ற சமூக விரோத சக்திகளின் கூடாரமாகவே திகழ்கிறது. மாலை மங்கிவிட்டால் மேற்கூறிய எல்லோருமே அடிக்கும் கூத்து, அந்தப் பகுதியில் வசிக்கும் அனைவருக்கும் தெரியும். அதனால் அவர்கள் அங்கு அடியெடுத்து வைத்துவிட மாட்டார்கள். இதனால் தான் அந்தக் கொடூர சம்பவத்தின்போது அவர்கள் உதவி கேட்டு கத்தியது யாருக்கும் கேட்கவில்லை. நாடு கொந்தளிக்க ஆரம்பித்த நிலையில் முகமத் அப்துல், விஜய் ஜாதவ், காஸிம் பெங்காலி, சலீம் அன்சாரி மற்றும் அஷ்ஃபக் ஆகிய ஐந்து குற்றவாளிகளும் அடுத்தடுத்து சுற்றிவளைக்கப்பட்டு இப்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தான். குற்றவாளிகளைவிட அந்தப் பெண் பத்திரிகையாளரை நாசம் செய்தபோது படம் எடுத்த செல்போனை கைப்பற்றுவதில் தான் பொலிஸார் மும்முரமாக உள்ளனர். எனினும் அதனை வைத்திருந்த காசிம் பெங்காலி பொலிஸாரிடம் சரியான பதிலைச் சொல்லவில்லை., அந்த செல்போனில் உள்ள படங்கள் தமது கையில் சிக்காமல் இன்டர்நெற்றில் வெளியாகிவிடக் கூடாது என்ற பதற்றமும் பொலிஸிடம் பற்றிக் கொண்டுள்ளது. இன்னும் பொலிஸ் தேடுதல் தொடர்கின்ற போதும்.

நன்றி விகடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org